விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது+IV — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 தை 01 சனிக்கிழமை (15.01.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 027

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## ஜனாதிபதி நாளை யாழ்.வருகிறார்



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ இரண்டு நாள் விஜய மாக நாளை யாழ்ப்பாணத் திற்கு வருகை தருகின்றார்.

யாழ்ப்பாணத்திற்குவருகை தரும் ஜனாதிபதி நாளை பிற்பகல்ஒருமணிக்குவயாவியான மத்திய மகா வித்தியாலய மண் டபத்தை திறந்து வைக்கின்றார்.

அத்துடன் பிற்பகல் 3 மணிக்குகேரதீவு-சங்குப்பிட்டி பாலத்தின் ஊடான போக்கு வரத்தைஆரம்பித்துவைப்பார். ஜனாதிபதியின்விஜயம்தொடர் பில் மேலும் தெரியவருவதா வது,

யாழ்ப்பாணத்திற்குவருகை தரும் அவர் நாளை பிற்பகல் ஒரு மணிக்கு வயாவிளான் மத்திய மகா வித்தியாலத்தில் நடைபெறும் ஸ்தாபகர்தினவிழா வில் பிரதம விருந்தினராகக்

(20ஆம் பக்கம் பார்க்க)

## மழை இன்னும் பெய்யும் அபாயம்
## இதுவரை 5000 கோடி ரூ. இழப்பு
### மட்டு. மாவட்டமே அதிக பாதிப்பு

(மட்டக்களப்பு)

நாட்டின் பல இடங்களிலும் தொடர்ந்தும் மழை பெய்யும் அபாயம் இருப்பதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. அதே நேரம் குறைவடைந்துவரும் வெப்பத்தால் குளிர்நிலை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல பிரதேசங்களில் தொடர்ந்து பெய்துவரும் மழையினால் இதுவரை

(20ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளூராட்சித் தேர்தல்

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன்
# 4 தமிழ்க் கட்சிகள் இணையும்!

(கொழும்பு)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் இடம் பெற்றுள்ள கட்சிகளில் 4 அரசியல் கட்சிகளும் இணைந்து போட்டியிடவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(20ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர் சுட்டுக்கொலை விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக கூறப்படுவதை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ள அதேவேளை இச்சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்துமாறு கடற்படையினருக்கு அவர் உத்தரவிட்டுள்ளதாக இந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடனான காலை உணவு

(20ஆம் பக்கம் பார்க்க)

## முறையற்ற ஆட்சி காரணமாக இலங்கைக்கு சாபம்– ரணில்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முறையற்ற ஆட்சியினால் இலங்கைக்கு கடவுள் சாபமிட்டுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எல்லா மதத்தின் கீழும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இந்த சாபம் கிடைத்துள்ளதாக அவர் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போது குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் சிறந்த ஆட்சிமுறை ஒன்று ஏற்படுத்தப்படும் வரையில் இந்த சாபம் தொடரும் எனவும் நாட்டின் அரசியல் அமைப்பையும் புத்தசாசனத்தையும் மீறி செயற்பட்டு வருகின்ற மகிந்த ராஜபக்ஷவினால் நாட்டுக்கே ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சாபத்தினாலேயே இலங்கையில் தொடர்ச்சியாக பல இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டு வருவதாகவும் ரணில் சுட்டிக் காட்டியுள்ளார்.

(ந-5)




NIBM BUILDING COMPETENCIES
HOTLINES
021 222 0360 , 0361 , 0362
A statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development
Admissions Started......
NIBM BUILDING COMPETENCIES Jaffna யாழ்ப்பாணம்


கிளிநொச்சியில்...
தீமைகள் நீங்கி நன்மைகள் பெருகிட உலகிற்கு ஒளிதர வருவாய் தைத்திருநாளே!
கிருபா லேணர்ஸ்
Regd No Ds/589
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை



தலைமைக் காரியாலயம்:-
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி :- 021 222 4353, 0777225292
கிளை :- கிளிநொச்சியில்
ஐயனார் வீதி. (கச்சேரிக்கு அருகாமை)
கிளிநொச்சி. தொலைபேசி :- 021 2285505, 0777238600

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பாகிஸ்தானின் படைத்தளபதி 19ஆம் திகதி இலங்கை வருகிறார்



(கொழும்பு)

பாகிஸ்தானின் படைத்தளபதி அஸ்ரப் பெர்வஸ் கயானி மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

எதிர்வரும் 19ஆம் திகதி கொழும்புக்கு வரும் இவர் இலங்கை படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் படைத்தளபதி ஜகத் ஜயசூரிய ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இலங்கையை மையப்படுத்தி இந்து சமுத்திர பிராந்திய வல்லரசுக்கான ஆதிக்க போட்டியில் பாகிஸ்தானும் முனைப்புக் காட்டுவதாக கொழும்பு ஊடக ஒன்று குறிப்பிட்டுள்ளது.

இவ்வடிப்படையில் இலங்கையுடனான இராஜதந்திர பாதுகாப்பு மற்றும் வர்த்தக உறவுகளை அண்மைக் காலமாக பாகிஸ்தான் வலுப்படுத்தி வருவதாக இவ்வூடகம் தெரிவித்துள்ளது.

இதன் பின்னணியிலேயே பாகிஸ்தான் ஜனாதிபதி அசிவ் அலி சர்தாரி கடந்த வருடம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டதாகவும் இவ் விஜயத்தின் பின்னர் இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் பாதுகாப்பு தொடர்பான இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது. (ந-5)

# நியமனப்பத்திரம் தாக்கல் காலம் நீடிப்பு ஜனாதிபதியின் முடிபில்

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை காரணமாக அப்பிரதேசத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்கு நியமனப்பத்திரம் தாக்கல் செய்யும் காலத்தை நீடிப்பது தொடர்பில் இன்னும் ஒரு சிலதினங்களில் சாதகமான பதிலளிப்பதாக பிரதி தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசபிரிய உறுதியளித்துள்ளார் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கும் பிரதி தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேச பிரியவுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று தேர்தல் திணைக்களத்தில் நடைபெற்றுள்ளது. இச் சந்திப்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ந-5)

# சாதாரண பயணிகள் போல் கோத்தபாய நடத்தப்பட்டார்

## இஸ்ரேலில் சம்பவம்


(கொழும்பு)

படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று முன்தினம் இஸ்ரேலுக்கு சென்றபோது அவரை இராஜதந்திர முறையில் அணுகாமல் சோதனைக்கு உட்படுத்தியதால் அவர் மிகவும் அசௌகரியத்திற்கு உள்ளானதாக தெரிய வருகின்றது.

ஜோர்தானில் இருந்து இஸ்ரேலுக்குச் சென்ற கோத்தபாய ராஜபக்ஷ இஸ்ரேலின் பொன் கூரியன் விமான நிலையத்தைச் நேற்று சென்று முக்கிய பிரமுகர்கள் வெளியேறும் வழியாக அவர் வெளியேற முயன்ற போது இஸ்ரேலிய விமான நிலைய அதிகாரிகள் அதற்கு இடமளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் சாதாரண பயணிகள் போல் சகல பரிசோதனைகளும் நடத்தப்பட்ட பின்னரே அவர் வெளியேற அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிய வருகின்றது.

இலங்கை படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் இரு படை உயரதிகாரிகளும் சென்றிருந்தனர். இந் நிலையில் இவர்களின் முன்னிலையில் இஸ்ரேலியப் புலனாய்வு பிரிவினர் தன்னை சோதனையிட்டதால் கோத்தபாய ராஜபக்ஷ கடும் கோபமடைந்துள்ளதாக கூறப்படுகிறது.



இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவரும், முன்னாள் விமானப்படைத் தளபதியுமான டொனால்ட் பெரேரா வின் முன்னைய ஏற்பாடுகளில் காணப்பட்ட குறைபாடுகளே கோத்தபாய ராஜபக்ஷ அசௌகரியத்திற்கு உள்ளாகக் காரணம் என இஸ்ரேலில் உள்ள இலங்கையர் சங்கத்தினர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள் ளனர்.

அதேவேளை இஸ்ரேல் சென்றுள்ள கோத்தபாய ராஜபக்ஷ அங்கிருந்து அமெரிக்கா செல்ல உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந)

# உயர் நீதிமன்ற தீர்ப்பு வரும்வரை ஹைகோப் வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

இராணுவ நீதிமன்றம் அரசியலமைப்பின்படி ஓர் நீதிமன்றமா? என்ற உயர் நீதிமன்ற தீர்ப்பு வரும் வரை ஹைகோப் வழக்கு விசாரணையை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று ஒத்திவைத்துள்ளது.

இராணுவ நீதிமன்றம் ஹைகோப் வழக்கில் முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவை குற்றவாளியாக கண்டு தண்டனையும் அளித்தது.

இந்த தீர்ப்பை எதிர்த்து சரத் பொன்சேகா கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மேன் முறையீடு செய்தார். வழக்கு நடந்து கொண்டிருந்த போது மேல் நீதிமன்றம் இலங்கை அரசியலமைப்பின் பிரகாரம் ஒரு நீதிமன்றமா? என தெளிவுபடுத்தும்படி உயர் நீதிமன்றத்தை கேட்டுக்கொண்டது.

இது தொடர்பில் உயர் நீதிமன்றம் தீர்ப்பை வழங்காத நிலையில் சரத் பொன்சேகாவின் சட்டத்தரணி ஓர் ஆட்சேபனையை கிளப்பினார்.

இராணுவ நீதிமன்றம் ஒரு நீதிமன்றம் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தால் சரத் பொன்சேகாவை ஒரு குற்றத்துக்கு எதிராக இரண்டு நீதிமன்றங்களில் விசாரித்ததாக முடியும்.

இது ஏற்புடையதல்ல. எனவே உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வரும் வரை மேல் நீதிமன்றம் ஹைகோப் வழக்கை விசாரிப்பதை நிறுத்த வேண்டும் என வாதிட்டார்.

இதற்கமைய உயர் நீதிமன்ற தீர்ப்பு வரும் வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ந-5)

## சிறைச்சாலை அமைச்சின் ஏற்பாட்டில்

# யாழ். மத்திய கல்லூரியில் இன்று பொங்கல் விழா

மனிதவள அபிவிருத்தி சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகரா தலைமையில் தைப் பொங்கல் கலாசார விழா இன்று காலை 8 மணிக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சின் ஏற்பாட்டிலான இந்த தைப் பொங்கல் கலாசார விழா யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறும்.

இந்நிகழ்வில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை புனரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, பாரம்பரிய கைத்தொழில்கள் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கலாசார அமைச்சர் ரி.பி.ஏக்கநாயக்க, வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள், அரச உயர் அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் இந்திய மற்றும் இலங்கைக் கலைஞர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ந-5)

# யாழ்.தே.க. கல்லூரி புதிய மாணவர் இணைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 17.01.2011 திங்கட்கிழமையன்று நடைபெறவிருந்த 2011ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்களை வரவேற்று இணைத்துக் கொள்ளும் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் 18.01.2011 செவ்வாய்க் கிழமை இடம் பெறும்.

கல்லூரியில் பதிவு செய்த மாணவர்கள் அனைவரும் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பெற்றோர், பாதுகாவலர்களுடன் சமுகமளிக்குமாறு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கேட்டுள்ளார்.

இங்கு 9 பாடநெறிக்களுக்காக 200 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இதுவரை 112 மாணவர்கள் மட்டுமே பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். மிகுதி மாணவர்கள் இவ்வாரத்திற்குள் பதிவுகளை மேற்கொள்ளத் தவறின் காத்திருப்போர் பட்டியலிருந்து புதியவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். ஆங்கில பாட நெறிக்கான நேர்முகப்பரீட்சை விரைவில் இடம்பெறவுள்ளது.

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண, மலையகப் பகுதி மாணவர்கள் தங்கள் பதிவுகளை 021 2230035 என்ற இலக்கத்திற்கு தொலைநகல் மூலம் மேற்கொள்ள முடியும். (ந)

# யாழ். மாவட்ட மீனவர்களின் கோரிக்கைகள் ஜனாதிபதியிடம் மகஜராகக் கையளிக்கப்படும்

வடக்கு கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்துமாறு யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் யாழ்.மீனவ சங்கங்களின் சமாசம் கோரிக்கை முன்வைக்கவுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வடக்கு கடற்பரப்பில் இந்திய ரோலர்களின் அத்துமீறிய மீன்பிடியினால் யாழ்ப்பாணம் மற்றும் வன்னி கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே இந்திய ரோலர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்தும் வகையில் யாழ்.மாவட்டத்தில் அமைக்க திட்டமிட்டுள்ள மூன்று மீன்பிடி துறைமுக கட்டுமான நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல் குடாநாட்டில் மொத்தம் 20ஆயிரம் குடும்பங்கள் கடற்றொழிலை நம்பியிருக்கும் நிலையில் அவர்களின் 6 ஆயிரத்து 150 குடும்பங்கள் மீள் குடியேறிய குடும்பங்கள் என்றும் 500 அங்கவீனர்களது வாழ்வாதாரத்திற்கு வழிசமைத்துக் கொடுத்தல், அதுவரை விடுவிக்கப்படாத மீனவர் கிராமங்களின் மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்தல் உள்ளிட்ட முக்கிய கோரிக்கைகளை யாழ்.மாவட்ட மீனவ சங்கங்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் முன் வைக்கவுள்ளனர்.

இது தொடர்பில் மீனவ சமாசப் பிரதிநிதிகளுக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்குமிடையில் நேற்று அவரது அலுவலகத்தில் சந்திப்பு நடைபெற்றது. (ந-5)


யாழ்ப்பாணம், மாநகரசபை

பண்ணை மீன்சந்தை பகிரங்க ஏலம்

பண்ணை மீன் சந்தையினை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலம் 2011.01.18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு யாழ். மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதி முன்றலில் நடைபெறவுள்ளது.

திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா
மாநகர முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
(சி-2154)

காணி விற்பனைக்கு

கந்தர்மடம், பழம் வீதியில் (OLD ROAD) இல. (20), 56/2 வீட்டிற்கு முன் பக்கமாக அமைந்துள்ள நிலப்பரப்பு 1 குளி 14. 72 (கிட்டத்தட்ட 1 3/4 நிலப்பரப்பு) விஸ்தீரணமுள்ள, 1/2 வாசிக் கிணற்றுப்பங்கை உள்ளடக்கிய சதுரமான காணி உடன் விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை.
தொடர்பு:- 0773265237
0212220430
(3517)

அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்
வெற்றி இலக்கு 1
தரம்1, 2, 3, 4, 5, பயிற்சி பரீட்சை வினாத்தாள்கள் வெளிவருகின்றது.
பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்
துயா அச்சகம்
138, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே இல.021 3737850
575, கே.கே.எஸ். றோட், நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
(3528)

செல்லா சினிமா


காட்சி நேரம்: 10.30,2.30,6.30,9.30

PC SOLUTIONS

அனைவருக்கும்
உள்ளங்களில் உவகை பொங்க
இல்லங்களில் வளமான
வாழ்வு தங்க
தைப்பொங்கள் வாழ்த்துக்கள்



PCS PC SOLUTIONS
TECHNOLOGIES (PVT) LTD
305,Kasthuriyar Road,Jaffna. M.M.V Road, Nelliyadi.
T.P.021 2221101,021 2229644 021 2264999
email:- pcsjaffna@sltnet.lk
05,Kanakapuram Road,Kilinochchi.
021 2285960

பொங்கிவரும் தைத்திருநாள்
அனைவரின் வாழ்விலும்
புதுப் பொழிவை நல்கிட
உளமார வாழ்த்துகின்றோம்



கஜமுகன் ஹாட்வெயர்
147,149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. இல: 021 222 2833

Sun TV


இப்போது
டயலொக்
TV இல்




KTV
MUSIC

டயலொக் TV
இணைப்புக்
கட்டணம்
ரூ. 9,990/-

Dialog

பூநகரியையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் சங்குப்பிட்டி பாலத்தின் புனரமைப்பு வேலைத்திட்டங்களை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோர் பார்வையிடுவதையும் புனரமைக்கப்பட்ட சங்குப்பிட்டி பாலத்தையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-என்.குமார்)

## இலவசப் பாட நூல் அனுப்பி வைப்பு

(அல்வாய்)

வடமராட்சியில் உள்ள மூன்று கல்வி கோட்டங்களுக்கும் இலவசப் பாட நூல் தொகுதி கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டு திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தரம் 11 மாணவர்களின் புவியியல், ஆங்கில வாசிப்பு நூல் தரம் 8 மாணவர்களின் வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும் ஆகிய நூல்கள் மட்டும் கிடைக்கப் பெற்றுள்ளன. (ஸ்ரீ-3-19)

## சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம் 158 மில். ரூபா செலவில் புனரமைப்பு

(கரவெட்டி)

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம் நீதிய மைச்சினால் சுமார் 158மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி மாவட்ட நீதிமன்றத்தின் நிர்மாண வேலைகள் கடந்த புதன்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நீதிமன்றமானது நவீன சகல வசதிகளையும் கொண்ட இருமாடிக் கட்டமாக புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த காலப் போரினால் சேதமடைந்த மேற்படி நீதிமன்றம தற்பொழுது வேறிடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-24)

## கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

யா/வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழா எதிர்வரும் 18ஆம்திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் ப.செல்வவிநயாகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி கலந்து கொள்ளவுள்ளார். இதில் பெற்றோர், நலன் விரும்பிகளை கலந்துகொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (ஸ்ரீ)

✠✠✠

(அல்வாய்)

யா/வல்வை மகளிர் மகா வித்தியால[ய] தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழா எதிர்வரும் 18ஆம்திகதி காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திருமதி தேவராணி நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரபல சமூகசேவையாளரும் கிராம அலுவலருமான சின்னராசா சிவபாலசிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-3-19)

✠✠✠

(அல்வாய்)

பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலத்தில் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள்விழா எதிர்வரும் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு வித்தியாலய அதிபர் க.க.யோகநாதன் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய வலயக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராஜா கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் ஆசியுரையை அஞ்சலி அக இயக்குநர் வண.பிதா டேமியன் அடிகளார் நிகழ்த்தவுள்ளார்.

அனைத்து பெற்றோரையும் குறித்த நேரத்திற்கு சமுகமளிக்குமாறு அதிபர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-3-19)

## புதிய நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் இவ்வாண்டிற்கான புதிய நிர்வாக சபை அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் போசகராக சி.குணநேசன், தலைவராக வி.கௌரிகாசன், செயலாளராக ஞா. குருபரன்,பொருளாளராக இ.ரகு, உப தலைவராக கி.துரைசிங்கம், உபசெயலாளராக சி.தனுசன், கணக்காய்வாளராக கி. இனோக்டினேஸ் ஆகியோரும் 7 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஸ்ரீ-9)

## தேசிய மட்ட சிறந்த பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களாக தெரிவானோர்

(யாழ்ப்பாணம்)

மத்திய சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதாரப் பணியகத்தினால் தாய் ,சேய் நல சேவைகளை வழங்கும் பொது சுகாதார உத்தியோகத்தர்கள் மத்தியில் சிறந்தவர்களைத் தேர்வு செய்யும் போட்டி தேசிய மட்டத்தில் கடந்த வருடம் நடாத்தப்பட்டது. மாவட்ட மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர்களிற்கு தேசிய மட்டத்தில் விசேட ஓர் நிபுணக் குழுவினால் நேர்முகத் தேர்வு நடைபெற்றது. இப்போட்டி தாய்,சேய் நல சேவைகளை வழங்கும் ஒவ்வொரு உத்தியோகத்தர்கள் பிரிவிற்கும் தனித்தனியாக நடாத்தப்பட்டது.

இப்போட்டியில் மேற்பார்வை குடும்ப நல உத்தியோகத்தர் பிரிவில் கரவெட்டி சுகாதார வைத்தியப் பணிமனையில் மேற்பார்வை குடும்ப நல உத்தியோகத்தர் திருமதி புஸ்பராணி வெற்றிவேல் தேசியமட்டத்தில் 3ஆவது இடத்தையும் குடும்ப நல உத்தியோகத்தர் பிரிவில் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய பணிமனையைச் சேர்ந்த செல்வி பத்மினி அம்பலவாணர், தேசிய மட்டத்தில் 3ஆவது இடத்தையும் வென்றுள்ளனர்.

மேற்படி இரு சுகாதார வைத்தியப் பணிமனைகளிற்கும் நிரந்தர சுகாதார வைத்திய அதிகாரிகள் இல்லாத நிலையில் இவர்கள் தமது சிறந்த சேவையின் மூலம் இப்போட்டியில் வெற்றி பெற்றமை பாராட்டிற்குரியது என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

## யுத்தத்தால் விதவையானோருக்கு கடன் வழங்கும் திட்டம் ஆரம்பம்

(கொழும்புத்துறை)

வடக்குப் பிரதேச செயலகப் பிரிவுகளில் யுத்தத்தினால் விதவையாக்கப்பட்டவர்களை குழுக்களாக அமைத்து அவர்களின் சமூக பொருளாதார மற்றும் கல்வி நிலைகளை மேம்படுத்துவதற்கான ஒன்றிணைக்கப்பட்ட செயற்றிட்டம் ஒன்றை அமைப்பதற்கு புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு முன்வந்துள்ளது.

இதனடிப்படையில் நான்கு வீத வட்டி அடிப்படையில் கடன் திட்டமொன்று ஆட்களையும் ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகார சபையால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இத் திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் போரினால் விதவையாக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளன.

எனவே நல்லூர் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட யுத்தத்தினால் விதவையாக்கப்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்கள் உடனடியாக தத்தம் கிராம அலுவலர்களிடம் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து கொடுக்குமாறு நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-51)




## தைப்பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிவில் இராணுவ ஒருங்கிணைப்பு தலைமையகத்தினால் தைப்பொங்கல் கொண்டாட்ட விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்ஹ தலைமை தாங்கி சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-4)

## கேந்திர இடங்களில் இராணுவ பரிசோதனை நிலையம்

(அல்வாய்)

வடமராட்சியில் அண்மையில் மூடப்பட்ட இராணுவ முகாம்களில் முக்கிய கேந்திர இடங்களில் பரிசோதனை நிலையம் அமைக்கப்பட்டு இரவு பகலாக இராணுவத்தினர் இப்பகுதி மக்களின் பாதுகாப்புக்காக கடமையில் ஈடுபட்டுள்ளனர். (ஸ்ரீ-3-19)

## ஞானச்சுடர் வாசகர் போட்டி

(மருதங்கேணி)

சந்நிதியான் ஆச்சிரமத்தால் ஒவ்வொரு வருடமும் நடத்தப்பட்டுவரும் "ஞானச்சுடர்-2010" வாசகர் போட்டி இம்முறையும் நடாத்தப்படவுள்ளது.

போட்டிக்கான வினாக்கள் 2010 மார்கழி மாத ஞானச்சுடரில் வெளியிடப்பட்டுள்ளது. போட்டியில் எவரும் பங்குபற்றலாம். ஒருவர் ஒன்றுக்குமேற்பட்ட விடைகளையும் எழுதி அனுப்பலாம். ஆனால் அவை தனித்தனியாக அனுப்பப்படவேண்டும்.

2010 ஆம் ஆண்டு தைமாதம் தொடக்கம் கார்த்திகை மாதம் வரையிலான வெளி வந்த ஞானச்சுடர் மலரிலிருந்தே வினாக்களும் எடுக்கப்படடுள்ளதால் விடைகளும் மலருக்குள்ளிருந்தே எடுக்கப்படவேண்டும்.

விடைகளை அச்சிடுவதோ போட்டோப் பிரதி எடுப்பதோ அனுமதிக்கப்படமாட்டாது.விண்ணப்பங்களை "வாசகர் போட்டிக் குழு" ,சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு என்ற முகவரிக்கு எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் தபால் மூலமோ அல்லது நேரிலோ அனுப்பலாம்.

போட்டியின் பெறுபேறுகள் மாசிமாதம் வெளியிடப்பட்டு பரிசில்கள் பங்குனிமாத இறுதியில் வழங்கப்படும். (ஸ்ரீ-3-35)

## டெங்கு, மலேரியா நோய்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கை

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேசத்தில் சுகாதாரப் பிரிவினர் கிராமம் கிராமமாக ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று டெங்கு, மலேரியா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன்போது வீடுகளில் தேங்கி நிற்கும் கழிவு நீர்களை அகற்றுமாறும் குப்பை கூழங்களை அழிக்குமாறும் மற்றும் வீடுகளை சுத்தமாக வைத்திருக்குமாறும் ஆலோசனை கூறி வருகின்றனர். (ஸ்ரீ-3-24)

# தைப்பொங்கல் சிறப்புமலர்-15.01.2011







# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிதி திரட்டும் நடவடிக்கையில் ஐ.நா

(கொழும்பு)

இலங்கையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சர்வதேச நிதி வழங்குநர்களிடம் இருந்து உதவிகளை கோரவிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் நியுயோர்க் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது பேச்சாளர் மார்டின் நெசர்ஸ்கீ இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதி நிதி நீல்புஹ்னே வெள்ளத்தின் பாதிப்புக்கள் குறித்து விபரங்களை சேகரித்துக்கொண்டிருப்பதாக தமக்கு தெரிவித்துள்ளதாகவும்அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக தற்போது ஐக்கிய நாடுகள் சபை நிவாரணங்களை வழங்கி வருகிறது.தொடர்ச்சியாக இந்த உதவிகளை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகவும் நெசர்ஸ்கீ தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# உழவர் திருநாள்

(யாழ்ப்பாணம்)

சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானக் கோட்டம் உழவர் திருநாள் ஆராதனை வழிபாடு இன்று சனிக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் மாலை 8 வரை நடைபெறவுள்ளது.

அத்துடன் மேற்படி மன்றத்தினால், போரினாலும் சுனாமியினாலும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு 10 துவிச்சக்கரவண்டிகள், 10 தையல் இயந்திரங்கள் ஆகியவற்றை வழங்கவுள்ளது.

(ஸ்ரீ-2)

# பண்பாட்டு நிகழ்வு

(துன்னாலை)

துன்னாலை அல்லையம்பதி வடிவேலர் மணிமண்டப நிர்வாகத்தால் நடத்தப்படும் பண்பாட்டு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ப.தியாகராஜா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பண்டிதரும் சைவப் புலவருமான பொன். சுகந்தன் கலந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்வில் சிறப்புரைகளும் பாரம்பரிய பண்பாட்டு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ-4)

# காசோலை மோசடியில் ஈடுபட்ட ஐவர் கைது


(கொழும்பு)

கண்டியிலுள்ள சிங்கபுர நிதி நிறுவனத்திற்கு சொந்தமான காசோலைகளைப் பயன்படுத்தி 30 இலட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது.

போலியான கையொப்பத்தை இட்டு கண்டி,இலங்கை வங்கி கிளையில் காசோலையை மாற்றியுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக கண்டி பொலிஸாருக்கு முறைப்பாடு செய்ததை தொடர்ந்து கொள்ளையில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் கண்டி வத்தேகம, கன்னொரு குளுகம்மண, வேவல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-4)

# பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணியினர் கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கை உதை ,ந்தாட்ட சம்மேளனத்தில் அங்கம் வகிக்கு ப 45 லீக் அணிகளுக்கிடையில் நடைபெற்ற உதை பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் சம்பியனான பருத்தித் துறை உதைபந்தாட்ட லீக் அணியினர் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் பணிமனையில் வைத்து நேற்று கௌரவிக்கப்பட்டனர்.

அதேவேளை இவ் அணியினர் விளையாடுவதற்கான சப்பாத்துக்கள்,விளையாட்டு உடைகள் ஆகியவை உடனடியாக கொள்வனவு செய்வதற்கு ஆளுநர் அனுமதி வழங்கியுள்ளார்.

இந்நிகழ்வில் இவ் அணியின் தலைவர் டி.எம்.வேதாபரணம்,செயலாளர் ரி.வரதராஜன், சிரேஷ்ட பயிற்றுவிப்பாளர் பி.முகுந்தன் ஆகியோர் ஆளுநருடன் படத்தில் நிற்பதைப் படத்தில் காணலாம்.

(ஸ்ரீ-2)

# குடாநாட்டின் சகல வீதிகளும் அடுத்த மாதம் புனரமைக்கப்படும்

## வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நீண்ட காலமாக சில வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவில்லை என மக்களிடமிருந்து கோரிக்கைகள் கிடைக்கப் பெறுகின்றன. இத்தகைய கோரிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுத்து வீதிகளைப் புனரமைத்து வருவதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் பெய்த மழை காரணமாக பலவீதிகள் குன்றும் குழியுமாக காட்சியளிக்கின்றன. இத்தகைய வீதிகளில் நாம் தற்காலிக புனரமைப்பை மேற்கொண்டு வருகின்றோம்.

எனினும் காலநிலை சீரின்மை காரணமாக வீதிகளை செப்பனிடுவதில் தடை ஏற்பட்டுள்ளது. இருந்த போதிலும் அடுத்த மாதமளவில் யாழ்.குடாநாட்டின் சகல வீதிகளின் புனரமைப்புப் பணிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கு சீன நிறுவனம் நிதியுதவிகளை வழங் கியுள்ளது என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2-6)

# விண்ணப்பங்கள் கோரல்

மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் தொழில் நுட்பவியல் நிறுவனத்தினால் நடத்தப்படும் மூன்று வருடகால முழுநேர தொழில் நுட்பவியல் தேசிய டிப்ளோமா கற்கை நெறிக்கு தெரிவு செய்வதற்காக தகுதி வாய்ந்த விண்ணப்ப தாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறியானது இருவருட முழுநேரக் கற்றலையும் ஒருவருட தொழிற் பயிற்சியையும் உள்ளடக்கியது. இதன் கற்கை மொழி ஆங்கிலம் ஆகும்.

விண்ணப்பதாரிகள் கப்பற்றுறைக் கல்வியும் தொழில் நுட்ப வியலும் எனும் வகைக்குள் கடல்சார் எந்திரவியல் தொழில்நுட்பவியல் , கப்பற்றுறை கல்வியும் தொழில் நுட்ப வியல் எனும் கற்கை நெறிகளையும் ஏனைய தெரிவில் இரசாயன எந்திரவியல், குடிசார் எந்திரவியல், மின்சார எந்திரவியல், இலத்திரன் தொலைத் தொடர்பு எந்திரவியல், பொறிமுறை எந்திரவியல், பல் பகுதியம் புடைவை மற்றும் ஆடை ஆகிய தொழில் நுட்பவியல் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 24 வயதிற்கு குறைந்தவர்களாக இருக்க வேண்டும். அத்துடன் 2008 , 2009 , 2010ஆம் ஆண்டுகளில் கல்விப் பொதுத் தராதர (உ/த) பரீட்சையில் இணைந்த கணிதம், உயர் கணிதம், பௌதீகவியல், இரசாயனவியலில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேற்படி விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை பிரதிப்பதிவாளர் தொழில்நுட்பவியல் நிறுவனம் , மொறட்டுவை பல்கலைக்கழகம் , கட்டுப்பெத்த , மொறட்டுவை என்னும் முகவரிக்கு ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்பு அனுப்பி வைக்க வேண்டும்.

❖ ❖ ❖

இளைஞர் அலுவல்கள் திறன் அபிவிருத்தி அமைச்சினால் இலங்கைத் தொழில் நுட் பக் கல்விச் சேவையின் வகுப்பு III (விசேட பதவியணி ) இல் உள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் இலத்திரனியல், கட்டடத்தொழில் , மோட்டார் பொறிநுட்பம் , மரவேலை , குளிரேற்றல் மற்றும் வளிச் சீராக்கல் , தொழில்நுட்ப வரைதல், மின்தொழிற்றுறை, ஆங்கிலம், கணனித் தொழில்நுட்பம் , விஞ்ஞானம் மற்றும் கணிதம் , வர்த்தகம் , உலோக வேலை போன்ற போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் போரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரஜையாகவும் விண்ணப்ப முடிவுத்திகதியன்று 21 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

இப் பதவிகளுக்கு விண்ணப்பிக்க தகைமையுடைய விண்ணப்பதாரிகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவங்களை பணிப்பாளர் நாயகம் , பயிற்சித் திணைக்களம், தொழில்நுட்பக்கல்வி அ.பெ. எண் 557. கொழும்பு 10 என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். இப் பதவிகளுக்குரிய மேலதிக விபரங்களை 2011.01.14 ஆம் திகதி வெளியான வர்த்த மானிப் பத்திரிகையிலோ, வலம்புரிக் காரியாலயத்திற்கு நேரில் வந்தோ பார்வையிடலாம்.

(ஸ்ரீ-4)

# இலங்கை வெள்ளப்பாதிப்பு குறித்து ஐ.நா.கவலை

மட்டக்களப்பு மற்றும் கல்முனைப்பகுதிகளில் மழை பெய்வது தற்போது நின்று விட்டாலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோர் சந்திக்கும் அபாயங்கள் அதிகமாக இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித நேயப் பணியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த மழை வெள்ளம் காரணமாக 10 இலட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். ஐ .நா.வின் சிறார்கள் நல அமைப்பான யுனி செப்பின் கொழும்பு அலுவலக பேச்சாளர் மோர்வின் பிளெச்சர் இந்த வெள்ளம் கிழக்கு மக்கள் தமது வாழ்க்கையில் கண்டிராத ஒன்று எனத் தெரிவித்துள்ளார்.

வெளியுலக, தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில் இருக்கும் பலருக்கு இன்னமும் உரிய வகையில் உதவியேதும் கிடைக்கவில்லை.

அவசர அவசரமாக அமைக்கப்பட்டுள்ள நிவாரணமுகாம்கள் பலவற்றில் உணவு, குடிநீர், மருந்து, நுளம்புவலை போன்றவற்றிற்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிய ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தொடர்ந்தும் தற்காலிக இருப்பிடங்களிலேயே தங்கியுள்ளனர்.

தமது இருப்பிடங்களுக்கு திரும்பும் வீதிகளிலும், வீடுகளிலும் தொடர்ந்தும் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் உடனடியாக அங்கு திரும்பக்கூடிய சூழ்நிலை இல்லையென்று அவர்களில் பலரும் தெரிவிக்கின்றனர்.

தற்போது குளிருடன் வீசும் காற்று மற்றும் கடும் குளிர் காரணமாக கால நிலை சீரடைந்து விட்டதாக தங்களால் இன்னும் உணர முடியவில்லை என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

தரைவிரிப்புக்கள்,பேர்வை, துண்டுபோன்றவை வேண்டும் என்ற கோரிக்கைகளும் வந்துள்ளன.

இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களைப் பொறுத்த வரை சமைத்த உணவு தொடர்பான பிரச்சினைகள் அவர்களால் சமாளிக்கக் கூடியதாக இருந்தாலும் குழந்தைகளுக்கான பால்மா மற்றும் மருந்துகள்தொடர்பான பிரச்சினைகள் இன்னமும் இருப்பதாக நிவாரணப் பணியாளர்களும் அங்குள்ள தாய்மார்களும் கூறுகின்றனர்.

மழை வெள்ளத்தினால் இம் மாகாணத்தில் பெரிதும் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் அநேகமான பிரதேசங்களில் தரைவழிப் பயணத்திற்கு பதிலாக படகுப் பயணமே முக்கிய போக்குவரத்தாக காணப்படுகிறது.

இம் மாவட்டத்தில் கடந்த 1957 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளம் தான் பெரு வெள்ளம் என ஏற்கனவே பலராலும் கூறப்பட்டது.

ஆனால் தற்போது ஏற்பட்டுள்ளது. அதை விடப் பெருவெள்ளம் என பெரியவர்கள் கூறுகின்றனர். (ஸ்ரீ-2)

# இன்று ஒரு தகவல்

## அம்மாவா? அப்பாவா?

ஒரு சின்னப்பையன் வந்தான். அவனைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டேன்.

''தம்பி உங்கடவீட்டில் அம்மா புத்திசாலியா? அப்பா புத்திசாலியா?'' என்றேன்.

அவன் அலட்சியமாக என்னைப் பார்த்து சிரித்தான்.

என்ன சேர் இது? இந்தக் காலத்தில் இது கூடவா தெரியாமல் இருக்கிறீங்க? என்றான். ஒரு சின்னப்பையன் என்னைப் பார்த்து இப்படிக் கேட்டு விட்டானே என்று நினைக்கும் போது எனக்கு ஒரு மாதிரியாகிவிட்டது.

அதன்பின் தான் என்னுடைய தாத்தா சொன்ன ஒருகதை எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. அது என்ன தெரியுமா?

ஒரு ஊரில் ஒரு அம்மாவும் மகனும் இருந் தார்கள். அந்த மகனுக்குத் திடீரென்று தேசம் முழுவதும் சுற்றிப்பார்க்க வேண்டுமென்று ஆசை.

அந்த அம்மாவுக்கு இது பிடிக்கவில்லை. மகனைப் பிரிந்திருப்பதற்கு அவருடைய மனம் இடம் கொடுக்கவில்லை. வேண்டாமென்று சொல்லிப் பார்த்தார். அவன் கேட்கவில்லை. போயே தீருவேன் என்று ஒற்றைக்காலில் நின்றான். திடீரென்று புறப்பட்டான்.

சரி இவனைத் தடுக்க முடியாதென்று அந்த அம்மா முடிவு செய்தார்.

"இதோ பாரப்பா... நீ போவதென்று முடிவு பண்ணிவிட்டாய் அதை நான் தடுக்கவில்லை. போய்வா ஆனால் போவதற்கு முன் எனக்கு ஒரு வாக்குறுதி கொடுத்துவிட்டுப்போ" என்றார்.

போகும் போது இரவாக இருந்தாலும் சரி பகலாக இருந் தாலும் சரி புளியமர நிழலில் தங்கவேண்டும். திரும்பி வரும்போது இரவும் பகலும் நீ வேப்பமர நிழலேயே தங்க வேண்டும்" என்றார்.

"சரி அப்படியே செய்கின்றேன். என்று வாக்குறுதி கொடுத் துவிட்டுப் புறப்பட்டான் மகன். போகும் வழியில் புளியமர நிழலில் தங்கினான். தூங்கினான். அப்படியே போய்க் கொண்டிருந்தான்.

ஏழாவது நாள் அவனுடைய உடம்பு பலவீனமாகிவிட்டது. இனிமேல் நடக்க முடியாது என்ற நிலைமை.

யோசித்துப் பார்த்தான். சரி இதற்கு மேல் போக வேண்டா மென்று முடிவு செய்து கொண்டு திரும்பி வர ஆரம்பித்துவிட் டான். திரும்பி வரும் வழியில் வேப்பமர நிழலிலேயே தங்கி வந்தான். நாளுக்கு நாள் உடம்பு சரியாகி விட்டது. ஏழாம் நாள் வீடு வந்து சேரும் போது உடம்பு பழையபடி ஆகிவிட்டது. பூரண சுகம் அடைந்துவிட்டான். பயணம் போன பையன் திரும்பி வந்து விட்டானே என்று அந்த அம்மா ஆச்சரியப்படவில்லை. ஏனெனில் இப்படி நடக்கு மென்று அவருக்குத் தெரியும். மகன் சீக்கிரமாக திரும்பி வரவேண்டுமென்பதற்காகத்தான் அவர் அந்த யோசனையை சொன்னார். என்ன விடயம் என்பதையும் அவரே சொன்னார்.

மகனே! புளியமர நிழல் உடம்புக்கு உஷ்ணத்தைக் கொடுக் கும். அதனால் நீ தொடர்ந்து புளியமர நிழலில் தங்கியதால் நோய்க்கு ஆளாகிவிட்டாய். அதனால் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பி வந்துவிட்டாய். திரும்ப வரும்போது நீ தங்கியது வேப்பமரநிழல். அது உடம்புக்கு குளிர்ச்சியை தரக்கூடியது. நோயைத் தீர்க்கக் கூடியது. அதனால் சுகமாக வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டாய். உன்னுடைய பயணத்தை தடுப்பதற்காகத்தான் இப்படிச் செய்தேன்" என்றார் அந்த அம்மா.

பார்த்தீர்களா! அம்மாவின் புத்திசாலித்தனத்தை? அப்பாவாயி ருந்தால் இப்படியா செய்வார்?

ஒரு அப்பா மகனிடம் 10 ரூபா கொடுத்து இதை எடுத்துக் கொண்டு அடுத்த ஊருக்குப் போய் அங்கிருக்கும் மாமாவிடம் "இதைக் கொடுத்து விட்டு வா. வழியில் எங்கேயாவது மரத் தடியில் படுத்துத் தூங்கிவிடாதே" என்று எச்சரித்து அனுப்பினார்.

மகனுக்கு எச்சரிக்கையாக வாழ்வது எப்படி என்பதை கற்றுக் கொடுப்பதற்காக இப்படிச் செய்தார். அவன் பணத்தை வாங்கிக் கொண்டு போனான். அப்பா சொன்னதை மறந்து ஒரு மரத்த டியில் படுத்துத் தூங்கி விட்டான். அவனுக்குத் தெரியாமல் அவனு க்குப் பின்னால் போன அப்பா அவனுடைய கையிலிருந்த அந்த 10 ரூபாவை நைசாக எடுத்துக் கொண்டு திரும்பி வந்துவிட்டார்.

பையன் முழித்துக் கொண்டதும் பையைத் தடவிப் பார்த்தான். பணத்தைக் காணவில்லை. அழுது கொண்டே திரும்பி வந்தான். அப்பாவிடம் விடயத்தைச் சொன்னான் அப்பா சிரித்துக் கொண்டே சொன்னார்:

"அதற்குத்தான் ஆரம்பத்திலேயே எச்சரிக்கை பண்ணினேன். இனிமேலாவது நீ ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்பதற் காகத்தான் இப்படிச் செய்தேன். அந்தப் பணம் எங்கேயும் போகவில்லை. நான் தான் அதை உனக்குத் தெரியாமல் எடுத்து வைத்திருக்கிறேன். இதோ இருக்கிறது பார் அது'' என்று சொல்லி விட்டு பொக்கற்றில் கையைவிட்டார். அது ஓட்டையாக இருந்தது. அதை எவனோ கத்தரித்து எடுத்துக் கொண்டு போயிருக்கிறான்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறையில் கடல் வளம் தொடர்பான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

''தென் ஆபிரிக்க மற்றும் தென் ஆசிய நாடுகளின் சிற்றளவு மீன்பிடியாளர்களின் நீடித்த அபி விருத்திக்கு இடமளித்தல்'' என்ற பொருளிலான செயலமர்வு எதிர் வரும் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதிவரை யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நெதர்லாந்து அம்ஸ்ரர்டாம் பல் கலைக்கழகம், தென்ஆபிரிக்கா கேப்ரவுண் பல்கலைக்கழகம், இலங்கை றுகுணு மற்றும் யாழ். பல்கலைக்கழகங்கள் , வட அயர் லாந்து உல்ஸ்ரர் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை நப்சோ(NAFSO) மீனவர் அமைப்பு, தமிழ்நாடு (SIFFS) மீனவர் அமைப்பு ஆகி யன கூட்டிணைந்து ஏற்பாடு செய் துள்ள இந்த செயலமர்வில் மேற் குறித்த பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களைச் சேர்ந்த கடல்வளத்துறை சார்ந்த பேரா சிரியர்கள் மற்றும் மீனவ அமைப் புக்களை சேர்ந்த வளவாளர்கள் உட்பட இருபதுக்கும் மேற்பட்ட வர்கள் கலந்து கொள்கின்றனர்.

இச்செயலமர்வுக் குழுவின் இணைப்பாளராக அம்ஸ்ரர்டாம் பல்கலைக்கழக கலாநிதி மாட்டீன் பாவிங் முகாமையாளராக கேப்ர வுண் பல்கலைக்கழக கலாநிதி Scerge Ramaekeris ஆகியோரும் யாழ்.பல்கலைக்கழகத்தின் இணைப்பாளராக யாழ். பல் கலைக்கழக விரிவுரையாளர் கலா நிதி சூசை ஆனந்தனும் பொறுப் பேற்றுள்ளனர்.

இச்செயலமர்வானது தென் ஆபிரிக்க மற்றும் தென் ஆசிய நாடுகளினது குறிப்பாக இலங்கை - இந்திய சிற்றளவு மீன் பிடியில் ஈடு படுவோர் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் சமூக பொருளாதார ஆய்வு, கடல் வள ஆய்வு மற்றும் இத் துறைசார் ஆளணியினரின் இயலளவு மேம்பாட்டு விரு த்தி தொடர்பாகவும் இத்து றைசார் பட்டப் படிப்புக்கான வாய்ப்புகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள் ளது குறிப்பிடத்தக்கது. மேலும் வடபகுதி கரையோர ங்களுக்கு நேரடியாகச் சென்று இங்குள்ளநிலைமை கள் தொடர்பாகவும் மீனவர் களுடன் கலந்துரையாடப் படவுள்ளது.

இச்செயலமர்வானது தமிழ் நாட்டு மீனவர் பிரதி நிதிகளும் வடபகுதி மீனவ பிரதிநிதிகளும் கலந்து கொள்வதால் பாக்கு நீரி ணையில் மீனவர்கள் பிரச் சினைகள் எழுந்துள்ள சந் தர்ப்பத்தில் இச்செயலமர்வு முக்கியமானதாக இருக்கும் எனச்சுட்டிக்காட்டப்படுகின்றது.

இச் செயலமர்வுக்கான ஏற்பாடுகளை புவியியற்று றைத் தலைவர் பேராசிரியர் எஸ்.ரி.பி. இராஜேஸ்வரன் அத்துறைசார்ந்த விரிவுரை யாளர்கள், ஊழியர்கள் முனைப்புடன் மேற்கொண்டு வரு கின்றனர். இச்செயலமர்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்து கொள்வார். (ஸ்ரீ)

# தைப்பொங்கல் விழா

(சுன்னாகம்)

இனிய இதயங்கள் அமைப்பு வாழ்வகத்துடன் இணைந்து தைப்பொங்கல் விழாவை இன்று பிற்பகல் 2.30 மணிக்கு இனிய இதயங்கள் அமைப்பின் தலைவர் சி. விக்கினராஜா தலைமையில் வாழ்வகத்தில் கொண்டாடவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை தலைவரும் இந்து நாகரிகத்துறை முன்னாள் விரிவுரையாளருமான திருமதி நாச்சியார் செல்வநாயகம் கலந்து கொள்ளவுள்ளார். (ஸ்ரீ-9-54)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 160 | 180 | 150 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 350 | 250 |
| தக்காளி | 80-90 | 100 | 140 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 45 | 50 | 50 | 60 |
| கோவா | 50 | 100 | 100 | 80 |
| கரட் | 70 | 120 | 150 | 100 |
| பூசணி | 20 | 40 | 50 | 40 |
| புடோல் | 70 | 100 | 100 | 100 |
| வாழைக்காய் | 35 | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 200-300 | 280 | 280 | 270 |
| பெரிய வெங்காயம் | 130 | 130 | 150 | 150 |
| பாகற்காய் | 120 | 160 | 200 | 170 |
| வெண்டிக்காய் | 70 | 100 | 120 | 90 |
| கருணைக் கிழங்கு | - | 50 | 70 | 50 |
| பயற்றங்காய் | 250 | 280 | 260 | 200 |
| லீக்ஸ் | 80 | 130 | 160 | 120 |
| பீற்றூட் | - | 150 | 160 | - |
| கறிமிளகாய் | - | 280 | 300 | 250 |
| முருங்கைக்காய் | - | - | - | - |
| போஞ்சி | 100 | 160 | 200 | 130 |
| கத்தரிதம்புள்ள | 100 | 120 | 150 | 80 |
| கீரை - 1 பிடி | 20-25 | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 50 | 60 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 35-60 | 40 | 50-60 | 45 |

# இராசி பலன்

15.01.2011
(தை 01, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு
தசமி காலை 6.34 மணிக்கு
கார்த்திகை பின்னிரவு 12.26 மணிவரை
இராகுகாலம் 9.34 - 11.04 மணிவரை
சுபநேரம் 3.34 - 5.04 மணிவரை
கார்த்திகை விரதம், சபரிமலை யோதி தரிசனம், தைப்பொங்கல் திருநாள்

**மேடம்** யோகமான நாள், திட்டமிடாமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், சுப காரியப் பேச்சுக்கள் சுமுகமாக அமையும், வாக்கு மேன்மையுண்டு.

**இடபம்** பெருமைகள் வந்து சேர பெரு மாளை வழிபடவேண்டிய நாள், கனிவாகப்பேசி காரியங்களைச் சாதிப்பீர்கள், அவதூறாகப் பேசு பவர்களை இனம் கண்டு கொள்வீர்கள்.

**மிதுனம்** எடுத்த காரியத்தை முடிக்க ஒரு முறைக்குப் பலமுறை அலைய நேரிடலாம், நீங்கள் சந்திக்க வேண் டிய நபர் இல்லம்தேடி வரலாம், சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

**கடகம்** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆலய தரிசனம் ஆனந்தத்தை வளங்கும், பொருளாதார நிலை மேம்படும்.

**சிங்கம்** கொள்கைப் பிடிப்போடு செயற் படும் நாள், உறவினர் வருகை யால் உள்ளம் மகிழும் நாள், புத்துணர்ச்சியுடன் செயற் படுவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி** மறைமுக எதிர்ப்புக்கள் குறை யும், பூமியால் இலாபம் கிடைக் கும், பிரிந்து சென்றவர்கள் பிரி யமுடன் வந்தணைவர், பிரயாண நன்மையுண்டு.

**துலாம்** முருகப்பெருமானை வழி பட்டு ஆனந்தம் காணவேண்டிய நாள், மறதியால் சில பணிகளை செய்யாமல் விட்டு விடுவீர்கள், பணப்பற்றாக்குறை ஏற்படலாம்.

**விருச்சிகம்** இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், உறவினர் வருகை யுண்டு, விருந்துபசாரத்தில் கலந்து மகிழ்வீர்கள்.

**தனுசு** கடன் சுமை குறைந்து கவலை கள் தீரும் நாள், தன்னம்பிக்கை அதிகரிக்கும், சுவாரஸ்யமான நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**மகரம்** பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகள் நிறைவேறும் நாள், செல்வாக்கு அதிகரிக்கும், இறைவழிபாட்டில் கூடிய கவனம் செலுத்துவீர்கள்.

**கும்பம்** தாய்வழி உறவில் ஏற்பட்ட மன ஸ்தாபங்கள் குறையும், சுப செய் திகள் வந்து சேரும் நாள், வாகன சுகமுண்டு, நிலபுலன்கள் வாங் கும் எண்ணம் மேலோங்கும்.

**மீனம்** பகை விலகிப் பாசம் கூடும் நாள், தெய்வ நம்பிக்கை மெலோங் கும், உறவினர் வருகையால் மகிழ்வடையும் நாள், செல் வாக்கு அதிகரிக்கும்.

வளவன்

# இலங்கைக் கடற்படையினர் எல்லை மீறாதவர்கள்

## என்கிறார் இலங்கைத் தூதர்

தமிழக மீனவரை சுட்டுக்கொன்றது இலங்கை கடற்படையினர் அல்ல என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் பிரசாத் காரியவசம் தெரிவித்தார் என இந்திய ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

வெளியுறவுத்துறை அதிகாரிகளைச் சந்தித்த பின்னர் டில்லியில் செய்தியாளர்களுக்கு அவர் பேட்டியளித்த போது மீனவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தக் கூடாது. அவர்களை தாக்கக் கூடாது என்று எங்கள் கடற்படைக்கு கடுமையான உத்தரவு பிறப் பிக்கப் பட்டுள்ளது. அவர்கள் சர்வதேச எல்லையைக் கடந்து வந்தாலும் கூட தாக்கக் கூடாது என்று உத்தரவிட்டுள்ளோம்.

இருப்பினும் இந்தச் சம்பவம் குறித்து இந்தியா அதிகார பூர்வமாக இலங்கை அரசுக்கு தெரிவித்து இருப்பதால் இது குறித்து இலங்கை அரசு விசாரணை நடத்தும் என்று அவர் கூறினார்.

இலங்கைத் தரப்பிலும் இந்தியத் தரப்பிலும் விசாரணை நடத்தப்படும் போது தான் உண்மையிலேயே நடந்தது என்ன என்பது தெரியவரும் என்று அவர் கூறினார். எனக்குக் கிடைத்த தகவல்படி சம்பவம் நடந்த பகுதியில் எங்கள் கப்பல் இல்லை என்று கூறப்படுகிறது.

இலங்கை கடற்படை ஒருபோதும் எல்லையைத் தாண்டுவது இல்லை. ஆனால் இந்திய மீனவர்கள் சில நேரங்களில் எல்லையைத் தாண்டி இலங்கை கடல் பகுதியில் மீன் பிடிக்கின்றனர் என்றார்.

(ஸ்ரீ-2)

# எமக்கு ஊடக நிறுவனங்களே மிகப்பெரிய சவாலாகவுள்ளன

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் அமரர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை அரசாங்கம் அர்ப்பணிப்புடன் மேற்கொண்டு வருவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஊடக நிறுவனத் தலைவர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சண்டே லீடர் பத்திரிகையின் தற்போதைய தலைவர் லால் விக்ரமதுங்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

லசந்த படுகொலை தொடர்பில் இதுவரையில் எவ்வித முன்னேற்றமும் ஏன் ஏற்பட வில்லை என லால் விக்ரமதுங்க கேள்வி எழுப்பியிருந்தார்.

இதுவரையில் எவ்வித சரியான ஆதாரங்களும் கிடைக்கவில்லை எனவும் உங்களிடம் ஏதேனும் ஆதாரங்கள் இருக்கின்றனவா என ஜனாதிபதி லால் விக்ரமதுங்கவிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் மற்றும் டி.எம்.தஸாநாயக்க ஆகியோரின் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பிலும் இவ்வாறான நிலைமை காணப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமக்கு காணப்படும் மிகப் பெரிய சவால் ஊடக நிறுவனங்களே என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித் துள்ளார். (ஸ்ரீ-2)

# கிழக்கில் காணாமல் போன படகு தெற்கில் மீட்பு

அம்பாறை, பொத்துவில் பகுதியில் நேற்று முன்தினம் கடும் காற்று வீசியதன் காரணமாக படகொன்று இழுத்துச் செல்லப்பட்டுள்ளது. இந்த படகில் 10 மீனவர்கள் இருந்துள்ளனர்.

இவர்களை மீட்கும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டிருந்த போதிலும் இவர்களை மீட்பதற்கான வாய்ப்புகள் இல்லாமல் போயுள்ளது.

இந்த நிலையில் குறித்த படகில் சென்ற மீனவர்களது படகு அம்பாந்தோட்டை கடற்பரப்பில் வைத்து கடந்த 12 ஆம் திகதி மீட்கப் பட்டுள்ளதாக அறியவருகிறது.

பொத்துவில் கடற் பரப்பில் கடந்த 12 ஆம் திகதி காணாமற் போன 10 மீனவர்களுள் 7 பேரை கடற்படையினர் அம்பாந்தோட்டை கடற் பிரதேசத்தில் வைத்து மீட்டுள்ளனர். ஏனைய மூன்று பேரை தேடும் பணிகளை கடற் படையினர் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். (ஸ்ரீ-2)




# அமைச்சரவைத் தீர்மானங்கள்

### பட்டம் வழங்கும் அதிகாரம்

பட்டம் வழங்கும் அதிகாரம் கொண்ட கல்வி நிறுவனமாக தேசிய வர்த்தக முகாமைத்துவ கல்வி நிறுவனத்தை உருவாக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்த நிறுவனத்தின் ஊடாக வருடத்துக்கு 10 ஆயிரம் மாணவர்களுக்கு பயிற்சி வழங்க எதிர்பார்க்கப் படுகின்றது.

பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகாதோருக்கு மேற்படிப்பைத் தொடர வசதிகள் செய்து கொடுக்கும் வகையில் இந்த நிறுவனத்தை உருவாக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

### பொதுநலவாய விளையாட்டுப்போட்டி

எதிர்வரும் 2018ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டியை நடத்தும் வாய்ப்பை இலங்கைக்குப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை தொடருவதற்கு அமைச்சரவை முடிபு செய்துள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவின் ஆலோசனைக்கு இணங்க அம்பாந்தோட்டையை விளையாட்டு நகராகத் தெரிவு செய்வதற்கும் அது தொடர்பாக அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முடிபு செய்யப்பட்டுள்ளது.

### லிபியாவுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை

அணிசேராக் கொள்கையைக் கடைப் பிடித்து வரும் இலங்கையின் நெருங்கிய நட்பு நாடான லிபியா இலங்கையின் அபி விருத்தித் திட்டங்களுக்காக 500 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்க முன் வந்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் லிபியா விஜயத்தின்போது இந்த கடன் திட்டத்தின் கீழ் வடக்கு- கிழக்கு அபிவிருத்தி நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி தொடர்பு சாதனம் மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி ஆகியன தொடர்பாக கைச்சாத்திடப்பட்ட 3 புரிந்துணர்வு உடன்படிக்கைகளுக்கு அமைச் சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### கொழும்பில் ஐந்து நட்சத்திர விடுதி

கொழும்பு நகர மத்தியை வருமானம் மிக்க வர்த்தக கேந்திர நிலையமாக மாற்றியமைக்கும் நோக்கில் காலிமுகத்திடல் இராணுவத் தலைமையகத்துக்கு அண்மையில் புதிதாக ஐந்து நட்சத்திர விடுதி ஒன்றையும் பல்துறை செயலக கட்டடத் தொகுதியொன்றையும் அமைக்க முடிபு செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு ஏற்ப நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானத்தின் ஊடாக 1000 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நேரடி முதலீடாகக் கிடைக்கின்றது. (ஸ்ரீ-2)

# கொழும்பில் நீல, ஊதா நிற பஸ்கள் சேவையில்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபை கொழும்பு நகரில் 6 ஊதா நிற பேரூந்துகளையும் 6 நீல நிற பேரூந்துகளையும் வெவ்வேறான இரண்டு புதிய பாதைகளில் அடுத்த மாதம் முதல் சேவையில் ஈடுபடுத்தவுள்ளதாக போக்குவரத்து அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது.

இந்த பேரூந்து சேவைகள் வட்டப் பாதையில் ஓடும் கட்டணம் தூரத்தை பொறுத்து 6, 9 ,10 ரூபாவாக இருக்கும் என பிரதி போக்குவரத்து அமைச்சர் ரோகன திஸாநாயக்க கூறினார். 6பேரூந்துகள் கோட்டையிலிருந்து ஆரம்பித்து ஆமர்வீதி, பாணந்துறை, புதிய களனி பாலம், தெமட்டகொடை பொரளை ஆகிய இடங்களூடாகச் சென்று மீண்டும் கோட்டையை வந்தடையும். இந்தப் பேரூந்துகள் ஊதா நிறமாக இருக்கும்.

வேறு ஆறு பேரூந்துகள் கோட்டை, பௌத்தாலோக மாவத்தை, பம்பலப்பிட்டி ஆகிய இடங்களூடாகச் சென்று பின் மீண்டும் கோட்டை நோக்கிப் பயணிக்கும். இவை நீல நிறமாக இருக்கும்.

இந்த சேவைகள் பஸ் பயணிகளுக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும் என பிரதி போக்குவரத்து அமைச்சர் தெரிவித்தார். (ஸ்ரீ- 2)

# ஐ.நா.நிபுணர்கள் குழுவின் சேவைக்காலம் நீடிப்பு

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழுவின் சேவைக்காலம் நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் ஆலோசனை வழங்கும் நோக்கில் ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் பான் கீ மூன் மூவர் அடங்கிய நிபுணர்கள் குழுவொன்றை நியமித்திருந்தார்.

இந்த நிபுணர்கள் குழுவின் சேவைக் காலத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதன்படி ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழுவின் அறிக்கை அடுத்த மாத இறுதியளவில் சமர்ப்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. எவ்வாறெனினும் என்ன காரணத்திற்காக காலம் நீடிக்கப்பட்டதென்பது அறிவிக்கப்படவில்லை.

இந்தோனேஷியாவின் முன்னாள் சட்டமா அதிபர் மர்சூகி தாரூஸ்மனின் தலைமையில் ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழு இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் நிபுணர்கள் குழுவின் பணிகள் ஆரம்பிக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நிபுணர்களின் விசாரணைகள் அவசியமற்றவை என இலங்கை அரசாங்கம் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது. (ஸ்ரீ-2)

# கலாசார விழா

(நவாலி)

நவாலி ஸ்ரீ நாக ராஜ ராஜேஸ்வரி அம்பாள் திருக்கோயிலில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆலய முன்றலில் தைத் திருநாள் பொங்கல் வைபவத்துடன் கலாசார விழா ஆரம்பமாகி பகல் ஒரு மணிக்கு தமிழரின் பாரம்பரிய வீரவிளையாட்டுக்கள் இடம்பெறும்.

நாளை மாலை 3 மணிக்கு ஆலயத்தில் இறைவழிபாட்டுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன. நவாலி தெற்கு கிராம உத்தியோகத்தர் கு. எழிற்செல்வன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் எஸ்.உதயபாலன் கலந்துகொள்ளவுள்ளார்.

தொடர்ந்து கவியரங்கம், வில்லிசை, பட்டிமன்றம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ-9-26)

# ஆற்றுகை பகிர்வு இதழ் வெளிவந்துள்ளது

கிளிநொச்சி மாவட்ட செயலகத் தினால் வெளியிடப்படும் ஆற்று கைப்பகிர்வு இதழின் நான்காவது இதழ் வெளிவந்துள் ளது.

இவ் இதழில் கிளிநொச்சி மாவட் டச் செயலகத்தின் 2010 ஆம் ஆண் டின் செயற்பாடுகள், போரினால் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்னரான அபிவிருத்திப் பணிகள், நிர்வாக செயற்றிட்டங்கள் என்பவை உள்ளடங்கியதாக அமைந்துள்ளது. (ஸ்ரீ-7-30)

# நீர்வேலி காமாட்சியம்மாள் கைத்தொழில் கூ.சங்கம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரின் ஏற்பாட்டில் நீர்வேலி காமாட்சியம்மாள் கைத்தொழில் கூட்டுறவு சங்க புனரமைப்பு நடவடிக்கைகளை கைத்தொழில் அபிவிருத்தி சபை மேற்கொள்ளவுள்ளது.

இப்புனரமைப்பு வேலையில் கட்டடத் திருத்தம், புதிய இயந்திர உபகரணங்கள் வழங்குதல், பயிற்சி வழங்குதல் போன்றவை உள்ளடக் கப்படுவதாக கைத்தொழில் அபிவிருத்தி பதில் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# நூல் வெளியீட்டுவிழா

கோண்டாவில் கிழக்கு பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஆத்மீக சபாவின் ஏற்பாட்டில் யாழ். பல்கலைக்கழகம் உதவிப் பதிவாளர், கீதோபதேச வித்தகர் எஸ்.கே.என். தவராஜா எழுதிய ***ஆன்மீக வாழ்வியற் சிந்தனைகள்*** நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானம் திருக்கல்யாண மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் என்.சண்முகலிங்கன் , சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா, இலங்கை மின்சாரசபையின் யாழ்ப்பாணம் உதவிக்கணக்காளர் க.சுரேஸ்நேசன், யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக விரிவுரையாளர் செல்வி. யசோதா பரஞ்சோதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். நூல் அறிமுகவுரையை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் கணக்கியல் துறைத்தலைவர் பேராசிரியர் ரி. வேல்நம்பி ஆற்ற முதற் பிரதியை ஈ.எஸ்.பி நிறுவன உரிமையாளர் பே.நாகரத்தினம் பெற்றுக் கொள்வார். நூல் மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறை விரிவுரையாளர் பொ. சந்திரசேகரம் வழங்குவார்.

(ஸ்ரீ-9)

# கல்வி மாணிப்பட்ட நெறி புதிய அனுமதிகள்

தேசிய கல்வி நிறுவக கல்வி மாணிப்பட்ட நெறிக்கு புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களைத் தேசிய கல்வி நிறுவகம் கோரியுள்ளது.

ஆரம்ப இடைநிலை, ஆங்கிலம், விசேட கல்வி ஆகிய நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆசிரியப் பயிற்சியின் பின்னர் மூன்று வருட சேவையைப் பூர்த்தி செய்த அதிபர்கள், ஆசிரியர்கள். கல்வி அதிகாரிகள் இப் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பம் ஏற்கப்படும் இறுதித் திகதியன்று 50 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதி 31.01.2011 ஆகும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் 500 ரூபா விண்ணப்பக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் கூடிய விண்ணப்பத்தை பணிப்பாளர், ஆசிரிய வலுவூட்டல் துறை, தேசிய கல்வி நிறுவகம் மகரகம எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# அதாவுல்லாவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

(கொழும்பு)

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையொன்றை நாடாளுமன்ற செயலாளரிடம் எதிர்க்கட்சியின் பிரதம கொறாட ஜோன் அமரதுங்க நேற்று முன்தினம் கையளித்துள்ளார்.

தேர்தலுக்காக அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் கலைக்கப்படும் என நாடாளுமன்றத்தில் அமைச்சர் அதாவுல்லா தெரிவித்து விட்டு சில உள்ளூராட்சி மன்றங்களை கலைத்தமைக்கு எதிராகவே நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நம்பிக்கையில்லா பிரேரணையில் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி தலைவர் கரு ஜெயசூரிய, செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் எதிர்க்கட்சி பிரதம கொறடா ஜோன் அமரதுங்க உட்பட ஐக்கிய தேசிய கட்சியின் 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்டுள்ளனர். (ந-5)

# கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு 'திரிய' கடன் வசதிகள்

(யாழ்ப்பாணம்)

அரச ஈட்டு முதலீட்டு வங்கி மூலம் (SMIB) கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் சிபாரிசு செய்யப்படும் தொழில் முயற்சியாளர்களுக்காக *'திரிய'* கடன் வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக் கடன் திட்டமானது காணி அல்லது கட்டடப் பிணை-க்கு வழங்கப்படவுள்ளதாக கைத்தொழில் அபிவிருத்தி சபை பதில் பிரதிப் பணிப்பாளர் எஸ்.கெங்காதரன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2-6)

# பொங்கல்விழா

(யாழ்ப்பாணம்)

வழக்கம்பரை சுழிபுரத்தில் உள்ள சிவபூமி முதியோர் இல்ல பொங்கல் நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ஸ்ரீ-4)

# நாடும் நடப்பும்

சாயிராம்

பேயாசிரிய நவீனம்

ஐம்பதினை ஏழால் பெருக்கிய தோராண்டோ
தமிழன் வாணாள் இம் மண்ணில்
பறிபோன கதிரமலை, பாழ்போன திருக்கோணமலை
கூடவே கேதீச்வரம் உன்னவரும் என்னவரும்
தீர்த்தமாடவரும் கீரிமலையு செய்யுள்
கண்ட தோர்காலம் கழிப்புறு கிறிஸ்துக்கு முன்னே பல
மூளையில் மூண்ட மூளியினால் பூண்டதோர்
பேயாசிரிய நளினமென நவீனமொன்றை
சில் வாவின்வாரி சுடச் சுடீ நளின்
பேரினம் பத்தியில், முற்றிய புத்தியில் கண்டவெற்றியில்
மாறுகண் கொண்டு மாறிப் புனைதல் நல்லிணக்கம்
சோரம் போய்ச் சோருமோ பேரினத்தின் தலையிறக்கம்

அறியாதவன்

# 2011.01 15 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ *69* - ரோமின் ஆட்சியை ஒத்தோ கைப்பற்றி தன்னை மன்னனாக அறிவித்தான். எனினும் 3 மாதங்களில் அவன் தற்கொலை செய்துகொண்டான்.

★ *1559* - முதலாம் எலிசபெத் இங்கிலாந்தின் அரசியாக முடி சூடினாள்.

★ *1582* - லிவோனியா மற்றும் எஸ்தோனியாவை ரஷ்யா போலந்திடம் கையளித்தது.

★ *1609* - உலகின் ஆரம்பகால செய்திப் பத்திரிகைகளில் ஒன்றான Avisa Relation oder Zeitung, ஜேர்மனியில் வெளியிடப்பட்டது.

★ *1759* - பிரித்தானிய அருங்காட்சியகம் திறக்கப்பட்டது.

★ *1777* - அமெரிக்கப் புரட்சிப் போர்: வெர்மொண்ட் விடுதலையை அறிவித்தது.

★ *1799* - இலங்கையில் அடிமைகள் கொண்டு வரப்படுவது முற்றாகத் தடை செய்யப்பட்டது.

★ *1892* - ஜேம்ஸ் நெய்ஸ்மித் கூடைப்பந்து விளையாட்டு விதிகளை உருவாக்கினார்.

★ *1908* - யாழ்ப்பாணத்துக்கும் காரை நகருக்கும் இடையில் பயணிகள் படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

★ *1915* - மலாவியில் வெள்ளையினக் குடியேற்றத்தை எதிர்த்து யோன் சிலம்புவே தலைமையில் இடம்பெற்ற கிளர்ச்சியில் மூன்று வெள்ளையினத்தவர்கள் கொல்லப்பட்டனர்.

★ *1919* - மசாசுசெட்ஸ் மாநிலத்தில் பொஸ்டன் நகரில் இடம்பெற்ற பெரும் வெள்ளப் பெருக்கினால் 21 பேர் கொல்லப்பட்டனர்.

★ *1919* - ஜெர்மனியின் இரு சோசலிஸ்டுகளான ரோசா லக்சம்பேர்க், மற்றும் கார்ல் லீப்னெக்ட் ஆகியோர் துணை இராணுவக் குழுவினரால் சித்திரவதை செய்யப்பட்டுக்கொலை செய்யப்பட்டனர்

★ *1936* - முற்றிலும் கண்ணாடியால் அமைக்கப்பட்ட கட்டடம் ஒகைய்யோவில் கட்டப்பட்டது.

★ *1943* - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியர்கள் பசிபிக் பெருங்கடல் தீவான குவாடல் கனாலில் இருந்து விரட்டப்பட்டனர்.

★ *1943* -பென்டகன் திறக்கப்பட்டது.

★ *1944* - ஆர்ஜென்டீனாவில் சான் ஜுவான் நகரில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 10ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

★ *1966* - நைஜீரியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அபூபக்கர் டஃபாவா பாலேவா என்பவரின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

★ *1969* - சோயூஸ் 5 விண்கலத்தை சோவியத் ஒன்றியம் விண்ணுக்கு ஏவியது.

★ *1970* - நைஜீரியாவிடம் இருந்து 32மாத விடுதலைப் போரின் பின்னர் பயாஃப்ரா சரணடைந்தது.

★ *1970* - முவாம்மர் அல்-கடாபி லிபியாவின் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

★ *1975* - போர்த்துக்கல் அங்கோலாவுக்கு விடுதலை வழங்கியது.

★ *1973* - வியட்நாம் போர்: வடக்கு வியட்நாம் மீதான தாக்குதல்களை இடைநிறுத்துவதாக அமெரிக்க ஜனாதிபதி ரிச் சார்ட் நிக்சன் அறிவித்தார்.

★ *1977* - சுவீடனில் இடம்பெற்ற விமான விபத்தில் 22 பேர் கொல்லப்பட்டனர்.

★ *2001* - விக்கிப்பீடியா ஆரம்பிக்கப்பட்டது.

★ *2005* - கையடக்கத்தொலைபேசிகளில் தமிழ் குறுஞ் செய்திகளை அனுப்பும் செல்லினம் என்றமென் பொருள் மலேசியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ *2007* - சதாம் உசேனின் சகோதரர் பர்சான் இப்ராகிம் மற்றும் ஈராக்கின் முன்னாள் பிரதம் நீதியரசர் அவாத் ஹமீட் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்.

## பிறப்புகள்

★ *1622* - மொலியர், பிரெஞ்சு நாடகாசிரியர், நடிகர் *(இ.1673)*

★ *1866* - நேத்தன் சோடர்புளொம், நோபல் பரிசு பெற்றவர் *(இ.1931)*

★ *1895* - ஆர்ட்டுரி வேர்ட்டானென், நோபல் பரிசு பெற்றவர் *(இ.1973)*

★ *1908* - எட்வர்ட் டெல்லர், ஹங்கேரியில் பிறந்த அமெரிக்க இயற்பியலாளர், ஹைட்ரஜன் குண்டின் தந்தை *(இ.2003)*

★ *1923* - ருக்மணி தேவி, சிங்களத் திரைப்பட நடிகை *(இ.1978)*

★ *1926* - காசாபா தாதாசாகேப் சாதவ், இந்திய ஒலிம்பிக் வீரர் *(இ.1984)*

★ *1929* - மார்ட்டின் லூதர் கிங், அமெரிக்க கறுப்பினத் தலைவர் *(இ.1968)*

★ *1956* - மாயாவதி குமாரி, இந்திய அரசியல்வாதி

## இறப்புகள்

★ *1919* - ரோசா லக்சம்பேர்க்,ஜேர்மனிய சோசலிசவாதி *(பி.1870)*

★ *1981* - தேவநேயப் பாவாணர், தமிழறிஞர் *(பி.1902)*

★ *1988* - ஷோன் மாக்பிரைட், நோபல் பரிசு பெற்ற ஐரிஷ் குடியரசு இராணுவத் தலைவர் *(பி.1904)*

★ *1998* - குல்சாரிலால் நந்தா, 2ஆவது இந்தியப் பிரதமர், *(பி.1898)*

★ *2008* - கே.எம்.ஆதிமூலம், தமிழக ஓவியர் *(பி.1938)*

***2005 - ஈசாவின் ஸ்மார்ட் 1 என்ற லூனார் விண்கலம் சந்திரனில் கல்சியம், அலுமீனியம், சிலிக்கன், இரும்பு ஆகியவற்றைக் கண்டு பிடித்தது.***

# தைப்பொங்கல் சிறப்பு மலர்-15.01.2011

## கண்கண்ட தெய்வமாகிய சூரிய வழிபாட்டின் பெருமைக்குரிய தைப்பொங்கல் திருநாள்



"ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்" எனச் சிலப்பதிகார மும், திருமுருகாற்றுப்படை "அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில் அருக்கனாவான் அர னுரு அல்லனோ" எனவும் உலகம் உவப்ப வலனேர்பு திரிதருபலர் புகழ் ஞாயிறு எனவும் சமயச்சான் றோர் பலராலும் போற்றிப் பண்டு தொட்டுத்தொன்மையான கலாசா ரமிக்க வழிபாடாகச் சூரிய வழி பாடு எம்மக்களாற் கொண்டாடப் பட்டு வருகின்றது.

மண்ணில் வாழும் அனைத்து உயிர்களையும் வாழவைக்கும் இயற்கைச் சக்தியாகவும், மக்கள் வாழ்வில் உடல் நலத்தை ஓம்புவ துடன், உள்ளத்தையும் உறுதியாக வைத்துக் கொள்ளக் கூடியதான சிறப்புடையதாகவும் சூரியவழிபாடு திகழ்கின்றது.

இதனைச் சோதிட சாஸ்திர நூல்களும் சிறப்பாக "ஆரோக்யம் பரததாது நோதினகர" எனும் சுலோகத்தின் மூலம் எடுத்துக்காட் டுகின்றது.

மேலும் எமது பண்டைய புரா ணங்கள், இதிகாசங்கள், வேத சாஸ்திர நூல்கள் பலவும் சூரிய பகவானைப் பலவாறாக பெரு மைப்படுத்தியுள்ளன. வேத காலத் திலும், சிந்துவெளிநாகரிக காலத் திலும் சூரிய வழிபாடு சிறப்பிடம் பெற்றிருந்தது.

ஸ்ரீ இராமபிரான் "ஆதித்ய ஹிருதயம்" எனும் தோத்திரவழிபாட் டின் மூலம் இராவணனை வெற்றி கொண் டார். ஆதித்யஹிருதயத்திலே சூரியனே பிரம்மா, விஷ்ணு, சிவன், முருகன், குபேரன், மகேந்திரன், யமன், வரு ணன், சந்திரன் ஆகிய இறைசக்திக ளாக விளங்குவதாக எடுத்துக் காட் டப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியாக எகிப்து, கிரீஸ், ரோம்,ஜப்பான், சீனா, பபி லோன், யாவா, தாய்லாந்து முதலிய மேலைநாடுகளிலும் கீழைத்தேச நாடுகளிலும் சூரிய வழிபாடு பல் வேறு விதமாக நடைபெறுகின்றது. இதில் தமிழ் மக்கள் வழிபாடு தனிச் சிறப்புடையதாகும்.

தமிழ் மக்கள் சூரிய வழிபாட்டின் மூலம் வருடத்தை இருபிரிவாக உத் தராயணம், தெட்சணாயணம் எனக் கணக்கிட்டு வழிபடுகின்றார்கள். ஒரு வருடத்தில் இருமுறை சூரியனுடைய பயணமானது மாற்றமடைகின்றது. தைமாதத்தில் ஏற்படும் மாற்றம் உத் தராயணம் எனவும் ஆடிமாதத்தில் ஏற் படும் மாற்றம் தெட்சணாயணம் என வும் முன்னோர் வகுத்துள்ளனர். தை முதல் ஆனிவரை வடக்குப் பக்கமாக செல்லும் காலம்தான் உத்தராயண மும் ஆடி முதல் மார்கழிவரை தெற் குப் பக்கமாக செல்லும் காலம் தெட் சணாயணமுமாகும்.

மக்கள் தம் முன்னோரை ஆராதனை செய்ய மிகவும் உகந்தகாலம் சூரியன் தெற்குப் பக்கமாக செல்லும் தெட்ச ணாயணமாகிய ஆடிமுதல் மார்கழி வரையான காலமாகும்.

தேவர்களுக்கு தை முதல் ஆனி வரை பகல் பொழுதாகவும், ஆடி முதல் மார்கழி வரை இராப்பொழுதாகவும் கொள்ளப்படுகின்றது.

மானிடராகப் பிறந்தநாம் எக் காரியத்தையும் செய்ய ஆரம்பிக்குமுன் நன்றிக்கடனாக மூதாதையரை வணங்கி அவர்களின் ஆசியையும் பெறுகின் றோம். தென்புலத்தாராகிய நமது முன்னோரை தெட்சணாயண ஆரம் பமான ஆடிமாதத்தில் வரும் ஆடி அமாவாசை நாளிலே பிதிர்களுக்குத் தர்ப்பணம் செய்து நன்றிக் கடன் வழிபாடுகள் செய்வதால் நம் முன் னோர்களின் ஆசியுடன் நற்பேற டைய முடிகின்றது.



தை மாத முதல் நாளிலே தமிழ் மக்கள் தம் உயிர்த் தொழிலாகிய உழ வின் பயனையும், அதற்கு உறு துணையாகிய சூரிய பகவானையும் நன்றியுடன் பொங்கல் பொங்கி வழிபாடு நடாத்துகின்றனர்.

மேலும் உழவுத்தொழிலுக்கு உறு துணையான காளைகளையும் தைத்தி ருநாளின் மறுநாளிற் பட்டிப் பொங் கல் எனும் விழாவாகக் கொண்டா டுவார்கள்.

தைபிறந்தால் வழி பிறக்கும் எனும் முதுமொழியினை மனத்திற்கொண்டு தை பிறந்ததும் தமிழ் மக்கள் தமக்கு நல்வழிபிறக்கும் எனும் நம்பிக்கை யுடன் இயற்கைச் சக்தியாகிய கண்கண்டதெய்வமாகக் சூரிய பக வானைப் பொங்கல் பொங்கி வழி பட்டு பூமியிலே மாரியெல்லாம் சூரி யனாலே பயிர்பூப்பதுவும் காய்ப்ப தும் சூரியனாலே எனப் போற்றிப் பூரிப்புடன் துதிக்கின்றார்கள்.

இந்நன்நாளிலே எம் மக்கள் நல் வாழ்வுவேண்டி தைத்திருநாளாம் பொங்கல் பெருநாளைச் சிறப்புடன் கொண்டாடி இயற்கைச் சக்திகள் எமக்கு நற்துணைபுரிய வேண்டுதல் செய்வோம்.

நீர்வை மணி

### இனியாகுதல் இனியபொங்கல் படைப்போம் வாரீர் !

அன்பு பொங்க அமைதி பொங்க
அருளும் பொங்க அறமும் பொங்க
இன்பம் பொங்க இனிமை பொங்க
எங்கள் தமிழ்ப் புத்தாண்டே வா
தன்னலம் ஒழிக பொதுநலம் ஓங்க
தமிழர் வாழ்வு சிறப்பாய் அமைய
என்னரும் தமிழ்த்தாய் அரியணை அமர
இனிதாய் பொங்கல் படைப்போம் வாரீர்

கவிஞர் வ. யோகானந்தசிவம்

### தைப்பொங்கலில் மகிழ்ந்திட வேண்டும்

மக்கள் ஆட்சி வேண்டும்–இந்த
மாநிலம் சிறக்க வேண்டும்
சிக்கல் யாவும் மறைந்து–சமூகம்
சீருடன் வாழ வேண்டும்
சொக்க லோகம் போலே–இங்கு
சுதந்திரம் மிளிர வேண்டும்
பக்கச் சார்பு நீங்கி–அரசு
பணிகள் செய்ய வேண்டும்
திக்குத் திசை எங்கும்–சென்று
திரவியம் தேட வேண்டும்
செக்கர் வானம் கடலில் –கலக்கும்
காட்சியில் களித்திட வேண்டும்
முக்கனிச் சுவையாம் நம் தமிழ்–உயிர்
மூச்செனக் காத்திட வேண்டும்
கிழக்கினில் ஆதவன் உதிக்கையில்
தைப் பொங்கலில் மகிழ்ந்திட வேண்டும்

கவிஞர் க.சின்னராஜன்

### இனித்திடும் தைப்பொங்கல்

வியர்வை சிந்திய விளைநிலம் செழிக்க
விவசாயி தூவிய உழுநில நெல்மணி
உயர்ந்துமே கதிர்கள் குவிந்திடும் அழகு
உழவனின் உளமும் மகிழ்வினில் எழுமே
முயற்சியே என்றும் மானிடர் மேன்மை
மாநிலம் செழிக்க பொங்குவோம் வாரீர்
துயரினை நீக்கிடும் தைத்திங்கள் திருநாள்
தருகின்ற பொலிவு பொழுதெலாம் சுகமே!

அல்வையூர் கே.ஆர்.திருத்துவராஜா

### பொங்குக பொங்கல்

செங்கரும்பின் சுவை பொழிந்து
செந் நெல்லின் வளம்குவிந்து
மங்கலத்தின் ஒளியேற்றிப்
பொங்குகவே பொங்கல் இன்று!

குருதி சிந்தும் சாதிமதக்
குரோதங்களை இங்கொழித்து
பரிதியென அன்பொளிரப்
பொங்குகவே பொங்கல் இன்று!

செந்தமிழின் இனிய வொலி
இணையத்தில் குடியேறி
நந்தமிழே உலகாள
பொங்குகவே பொங்கல் இன்று!

புலவர் செ.பரமநாதன், தாவடி




# தைப்பொங்கல் சிறப்பு மலர்-15.01.2011

## இயற்கைத் தெய்வமாம் சூரிய பகவானுக்கு பொங்கி வழிபாடாற்றும் நன்னாள்



மக்கள் மத்தியில் நல்லெண்ணங்களையும் இலட்சியத்தையும் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றின் முன்னேற்றத்தையும் பிரதிபலிப்பதற்கு விழாக்களும் பண்டிகைகளும் கொண்டாடப்படுகின்றன. இன்று நடைபெறும் பொங்கல் விழாவை தமிழ் சமூகத்தின் தேசிய விழா எனலாம்.

இயற்கைத் தெய்வமாம் சூரிய பகவானுக்கு பொங்கி வழிபாடு ஆற்றும் நன்னாள். இதனையொட்டி தங்கள் இல்லங்களை புதுக் கோலத்தாலும் மகரதோரண மாவிலைகளால் அலங்கரித்து புத்தடுப்பினிலே புதுப்பானையிலே புத்தரிசியிட்டு பொங்கிப் படைத்து வழிபட்டு அயலவர்கட்கும் அளித்து உண்டு மகிழ்வர்.

ஒரு நாட்டிற்கு மிக அத்தியாவசியமான உணவுற்பத்தியை பெருக்குபவர்கள் விவசாயிகள். அவர்கள் நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள். உணவுற்பத்தியின் ஒரு பகுதியை தன்னிறைவு செய்யும் தொழிலாளிகளுக்கு நன்றி தெரிவிக்கும் விழா பொங்கல் விழா.


மறுநாள் நடைபெறும் மாட்டுப் பொங்கல் விழா ஏர்பூட்டி உழுகின்ற எருதுகளுக்கு நீராட்டி நீறணிந்து பூந்தார் சாற்றி பொங்கலிட்டு பூஜை செய்து வணங்கும் புனித நாளாகும்.

இறையருளால் இந்நிலையகன்று தமிழர் தம் வாழ்வு மங்கல சுதந்திர ஒளி பிரகாசிக்கும் நன்நாளை எதிர் கொண்டு தை பிறந்தால் வழி பிறக்கும் என்னும் நம்பிக்கையுடன் பகலவனாகிய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

"மேன்மை கொள் சைவநீதி விலங்குக உலகமெல்லாம்"

சிவ ஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள், தலைவர்,
வலிகிழக்கு சைவசமய அருள் நெறி மன்றம், கோப்பாய்.

## தைப்பொங்கல் வாழ்த்துச்செய்தி



உழவர் திருநாளாம் தைத்திங்கள் முதல் நாளில் அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக. உயிர் வளர்க்க உதவும் உழவரை போற்றுவோம். இறையருள் வளர்ப்போம். மாணவரின் கல்வியிலும் ஒழுக்கத்திலும் அதிகவனம்எடுப்போம். இளையவர்களின் கடந்த கால கனவாக இருந்தவைகளை பொங்கிடும் மகிழ்வோடு நனவாக்க முயற்சிப்போம். அமைதியான பாதுகாப்பான மக்கள் நல்வாழ்விற்கு இறைதுணையைநாடுவோம். மதத் தலைவர்களுக்கு கௌரவத்தை கொடுப்போம். பெற்றோருக்கு மதிப்பளிப்போம். உற்றார், உறவினரை அரவணைப்போம் .இயலாதோருக்கு உதவுவோம். நம் கலை கலாசாரத்தை பேணுவோம். துன்புறும் மக்கள் வாழ்விற்கு ஒளி கிடைக்க உதவத் தயாராவோம்.

வெள்ளத்தின் பாதிப்பால் பரிதவிக்கும் கிழக்கிலங்கை மக்களின் மறு வாழ்வின் உயர்விற்கு உதவிக் கரம் நீட்டுவோம். ஒன்றுபட்டு வாழ்வோம். ஆனந்தமாய் வாழ்வோம். இனிய நன்நாளில் எல்லா நலன்களும் சித்திக்க எமது தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்.

சிவஸ்ரீ சபா. வாஸுதேவக்குருக்கள், சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம், இலங்கை.


இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்
ரூபி நகை மாளிகை
111/1 (227) கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே - 021 222 2828
021 222 9038





எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
➤ இன்ரநெற் வசதிகள் ➤ போட்டோ பிரதிகள்
➤ புதிய பழைய திரைப்படங்கள் (ஒரிஜினல் பிரதி) பாடல்கள் என்பவற்றை DVD, VCDயில் பதிவு செய்தல் ஆகிய சேவைகளை சிறந்த முறையில் குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ள
SWANS BROWSING POINT
132, புங்கன்குளம் வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.



அனைவருக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்கள்
இன்றைய தொழில்நுட்ப உலகில் தன்னிகரற்ற நிறுவனம்
PC SOLUTIONS
Pcs PC SOLUTIONS
TECHNOLOGIES (PVT) LTD
305,Kasthuriyar Road,Jaffna.
T.P.021 2221101,021 2229644
email:- pcsjaffna@sltnet.lk
M.M.V Road, Nelliyadi.
021 2264999
05,Kanakapuram Road,Kilinochchi.
021 2285960



இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!
வெங்கடேஸ்வரா
ரான்ஸ்போட் சேவிஸ்
ஏ-9 பாதையூடாகப் போக்குவரத்துச் சேவை ஆரம்பித்து நடைபெறுகின்றது.
எவரும் எதிர்பாராத குறைந்த கட்டணத்தில் முற்றிலும் காப்புறுதி செய்யப்பட்ட பாதுகாப்பான போக்குவரத்துச் சேவை.
பொருட்கள் ஒப்படைத்து மூன்று நாட்களில் கிடைக்கும்.
கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் அலுவலகங்களைக் கொண்டு இயங்குகின்றது.
இன்றே நாடுங்கள் உங்கள் தேவையை இலகுவாக்குவதற்கு
125, 127, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 8306
127, பழைய சோனக தெரு,
கொழும்பு-12

# வாழையில் பீடைகளும் அவற்றின் முகாமைத்துவமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**பனாமா வாடல்நோய்**

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

வாழைச் செய்கையாளர்களுக்கு தலையிடியாயிருக்கும் பீடைகளுள் நோய்களும் உள்ளடங்கும். நோய்களினது தீவிரத்தன்மையைப் பொறுத்து அதற்குரிய முக்கியத்துவத்தை விவசாயப் பெருமக்கள் கொடுப்பது வழக்கமாகிவிட்டது. ஆனாலும் நோய்க் காரணிகளைப் பொறுத்தவரை அது எந்தப் பயிராயினும் மிகுந்த அவதானம் தேவை.

அதிலும் வருமுன் காப்பது என்பது மிகவும் அவசியம் என்பதனை மீண்டும் வலியுறுத்தி திட்டமிட்டதும், அவதானத்துடனான மேற்பார்வையுடன் செய்யப்படும் பயிர்ச்செய்கையின் மூலமே இவ்வாறான நோய்களை கட்டுப்படுத்தமுடியும்.

**வாடல்நோய் (Wilt)**

வாழையில் ஏற்படும் வாடல்நோய் அதி முக்கியமானது . யாழ்ப்பாணக்குடாநாட்டில் இந்நோயின் தாக்கம் பரவலாக அவதானிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் வாழைச் செய்கையாளர்களால் இந்நோயினை வேறுபிரித்தறிய முடியாதிருப்பதுடன் இதனுடன் சேர்த்து வேறு நோய்களும் பாதிப்பையேற்படுத்துவதால் நோயை துல்லியமாக இலகுவில் இனங்காணுவது சிரமமாகவே இருக்கும். இதனைக் கருத்தில் கொண்டு வாழையில் பாதிப்பை ஏற்படுத்தும் வாடல்நோய் பற்றி விளக்க முற்பட்டுள்ளேன்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முதன் முறையாக ஜமெய்க்கா, கோஸ்ரா றிக்கா, பனாமா போன்ற நாடுகளிலே அவதானிக்கப்பட்ட இவ் வாடல் நோய் பனாமா நாட்டில் வாழைச் செய்கையை முற்றுமுழுதாகவே கைவிடும் அளவுக்கு பாரதூரமானதாக இருந்ததாக அறியமுடிகின்றது. அங்கிருந்து வாழை அதிகளவில் பயிரிடப்படும் ஆசியா, அவுஸ்திரேலியா, பசுபிக் தீவுகள், ஆபிரிக்கா, வடக்கு மற்றும் தென் அமெரிக்கா ஆகிய பகுதிகளுக்கு பரவி தற்போது உலகளாவிய ரீதியில் முன்னிலைப்படுத்தும் முக்கிய நோயாக உருவெடுத்துள்ளது. பனாமா வாடல் நோயின் தீவிரத்தன்மை காரணமாக பல நாடுகளில் இதனைப் பரவவிடாது பலத்த பாதுகாப்பு முறைகள் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் தமிழ்நாடு, கேரளா கர்நாடகா, மகாராஷ்டிரா, ஆந்திரா மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் பரவலாகி பிரச்சினைக்குரியதாயிருக்கிறது.

13-VII

**நோயின் அறிகுறிகள்**

இந்நோயினது முக்கியமான அறிகுறியாக இலைகள் திடீரென வாடுதலாகும். நோய்த் தொற்றுக்குள்ளான வாழை மரத்தினது இலைகள் ஆரம்பத்தில் மஞ்சள் நிறமாகி பின்னர் வெளிறத் தொடங்கும். இலை மடலில் முறிவு ஏற்பட்டு இலைப் பரப்பு முழுவதுமாக தொங்கிக் காணப்படுவதுடன் வெளிறி சோர்ந்துபோயிருக்கும். தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கிடையில் முழு இலைகளுமே வாடியிருக்கக் காணப்படும் . இங்கே குருத்திலை மட்டும் பாதிக்கப்படாது அப்படியே இருக்கும். அதனது பச்சைநிறத்தில் மாற்றமெதுவும் ஏற்படாது விறைப்பாக நேராக இருக்கும். வாழைத்தண்டின் இடைப்பகுதியில் கிழிவு ஏற்பட்டு அதனால் இலை மடல்கள் நீளப் பக்கமாக கழருவதை அவதானிக்கலாம். வாழைத்தோட்டங்களில் அங்குமிங்குமாக எங்கும் இதனது பரவல் இருப்பதனை அவதானிக்கலாம். விளைநிலத்தில் குறிப்பிட்ட வாழைகளை ஆரம்பத்தில் தாக்கிய இந்நோய் தற்போது அனைத்து வாழை இனங்களுக்குமே சவாலாக இருப்பதுடன் இதனது பரவலையும் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. (தொடரும்)

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...



# விசா அனுமதியின்றி தங்கியிருந்த பங்களாதேஷ் பிரஜைகளுக்கு அபராதம்

விசா அனுமதியின்றி இலங்கையில் தங்கியிருந்த பத்து பங்களாதேஷ் பிரஜைகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கண்டி முருத்தலாவ பிரதேசத்தில் இவர்கள் தங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யபட்ட பங்களாதேஷ் பிரஜைகள் தலா 50ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த வேண்டும் எனவும் அபராதத்தை செலுத்தத் தவறுவோருக்கு ஆறுமாத கால சிறைத் தண்டனை விதிக்கப்படும் எனவும் கண்டி நீதவான் லிலித் ஏக்கநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 1998ஆம் ஆண்டு 45ஆம் இலக்க இலங்கைக் குடிவரவு குடியகல்வு சட்டத்திற்கு முரணான வகையில் குறித்த பங்களாதேஷ் பிரஜைகள் செயற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆபிரிக்க நாடொன்றில் வேலை வாய்ப்புப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் தாம் இலங்கை சென்றதாக குறித்த பங்களாதேஷ் பிரஜைகள் நீதவானிடம் தெரித்துள்ளனர்.

இலங்கை ஊடாக இவ்வாறு பலநாடுகளுக்குச் செல்தவதற்காக இந்தியா, பாகிஸ்தான், நேபாளம் மற்றும் பங்களாதேஷ் பிரஜைகள் சுற்றுலா விசாக்களின் மூலம் இலங்கைக்கு விஜயம் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த பங்களாதேஷ் பிரஜைகளுக்கு அடைக்கலம் வழங்கிய வீட்டு உரிமையாளர் மற்றும் வீட்டுத் தரகருக்கு எதிராகவும் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.(ஸ்ரீ-2)

# நீர்ப்பம்பியை திருடும் சம்பவங்கள் அதிகரிப்பு

(பொலிகண்டி)

பொலிகண்டிப் பகுதியில் நீர்பம்பிகள் பரவலாகத் திருடப்பட்ட சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. இச்சம்பவத்தில் ஒன்று கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.


பொலிகண்டி -பதுவளைப் பகுதியில் உள்ள வீடொன்றில் நுழைந்த திருடர்கள் கிணற்றுடன் பொருத்தப்பட்டிருந்த நிலையில் இருந்த 15 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர்ப்பம்பியினை எடுத்துச்சென்றுள்ளனர்.

இது தொடர்பாக உரிமையாளர் வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார். பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டு விசாரணைகளை மேற் கொண்டனர். இதேபோன்று கடந்த 6 ஆம் திகதி இரவு நீர்வளைப்பிள்ளையார் கோவிலடியிலுள்ள வீட்டினுள் புகுந்த திருடர்கள் குழாய்க் கிணற்றுடன் பொருத்தப்பட்டிருந்த நீர்ப்பம்பியினை களவாடிச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4-48)

## வாகனங்களுக்கான தகுதிச் சான்றிதழ் வழங்கல்

இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சிசாலையில் இம்மாதம் 19,29 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிவரையும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வாகனங்களுக்கு தகுதிச் சான்றிதழ் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் வடக்குப் பிரதான பிராந்திய முகாமையாளர் கே.கணேசபிள்ளை அறிவித்துள்ளார்.(ந-7)





யாழ்.எயிட் நிறுவனம் நலிவுற்ற மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக முன்னெடுத்துவரும் செயற்றிட்டத்திற்கு அமைய வலிகாம வலயத்திற்கு உட்பட்ட 50 பாடசாலைகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு காலணி மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம் பெற்றது. இந்நிகழ்வில் இந் நிறுவனத் திட்ட அலுவலர் தர்மினி உரையாற்றுவதையும் மத்திய வங்கியின் வடவலய முகாமையாளர் எல்.ஸ்ரீதரன், வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் ஏ.இராஜேந்திரன், தெல்லிப்பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கைலாசநாதன், திருமதி பி.அபிராமி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் பிரதம விருந்தினர் எல்.ஸ்ரீதரன் மாணவனுக்கு காலணி வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## வட -கிழக்கு அபிவிருத்திக்கு லிபியா 500மில்.அமெரிக்க டொலர் நிதியுதவி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு அபிவிருத்திப் பணிகளுக்காக லிபிய அரசாங்கம் 500மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கத் தீர்மானித்துள்ளது.

வடக்கு -கிழக்கு பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்தல், தொடர்பாடல் மற்றும் சுற்றுலாத்துறை ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்காக இந்த நிதி உதவி பயன்படுத்தப்படவுள்ளது.

குறித்த திட்டங்களை முன்னெடுப்பதற்காக இரு நாடுகளுக்கும் இடையில் விரைவில் மூன்று புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது.

அத்தோடு யுத்தத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில் இந்த உதவிகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

லிபியாவின் கறுப்புத் தேயிலைத் தேவையின் 90 வீதம் இலங்கையிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

## பாக். இராணுவத் தளபதி இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

பாகிஸ்தான் இராணுவத்தளபதி அஸ்ரப் பெர்வஸ் கயானி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். மூன்றுநாள் விஜயமொன்றை மேற்கொண்டு பாகிஸ்தானிய இராணுத் தளபதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ , இராணுவத்தளபதி ஜகத் ஜயசூரிய ஆகியோரை பாகிஸ்தானிய இராணுவத் தளபதி சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

எதிர்வரும் 19ஆம் திகதி பாகிஸ்தான் இராணுவத் தளபதியின் இலங்கை விஜயம் ஆரம்பமாகும் என அந்நாட்டு இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-4)

## நல்லிணக்க ஆணைக்குழுவின் அம்பாறை விஜயம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அம்பாறை மாவட்டத்திற்கான விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் எஸ்.பி. அத்துகொட இணையத்தளமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமை காரணமாகவே அம்பாறை மாவட்டத்திற்கான விஜயம் ஒத்திவைக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் நல்லிணக்க ஆணைக்குழு அம்பாறை மாவட்டத்திற்கு செல்லவுள்ள திகதி பின்னர் அறிவிக்கப்படும் என அத்துகொட மேலும் தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழு அம்பாறை மாவட்டத்திற்கான விஜயத்தினை கடந்த டிசம்பர் மாதம் நடத்தத் திட்டமிட்டிருந்த போதும் பின்னர் ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை எதிர்வரும் ஜனவரி 28 ஆம் திகதி முதல் 30 ஆம்திகதி வரை நல்லிணக்க ஆணைக்குழு அநுராதபுரம் மாவட்டத்திற்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளது. (ஸ்ரீ-4)

## தபால் மூல வாக்காளர்களுக்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிப்பதற்கான கால எல்லையை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு தேர்தல்கள் ஆணையாளர் நீடித்துள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது. இதற்கு வழங்கப்பட்ட காலம் போதாதென தேர்தல்கள் திணைக்களம் உணர்ந்து கொண் டதால் இதற்கான கால எல்லை நீடிக்கப்பட் டுள்ளது.

முன்னர் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி ஜனவரி 16 ஆம் திகதியென தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

## புலிகளின் விமானங்கள் உருவான விதம்;
## ஆணைக்குழுவில் வீடியோ ஆதாரம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் விமானங்கள் உருவாகிய விதத்தினைக் காண்பிக்கும் வீடியோ வடபகுதி மோதலின்போது இராணுவத்தினருடன் தங்கியிருந்து செய்திகளை வழங்கிய ரூபவாஹினி கூட்டுத்தாபன ஊடகவியலாளர் சமன்குமார விக்கிரமரட்னவினால் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் நேற்று முன்தினம் போட்டுக் காண்பிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளினால் பதிவுசெய்யப்பட்ட காட்சிகள் அடங்கிய ஒளிப்பதிவு நாடாக்களை தான் வன்னியில் மீட்டதாகக் கூறியே சமன்குமார இந்த வீடியோவினை அங்கு காண்பித்தார்.

விடுதலைப்புலிகளினால் பதிவுசெய்யப்பட்டதாகக் கூறி சமன்குமாரவினால் காண்பிக்கப்பட்ட அந்த ஒளிப்பதிவு தொகுப்பில் வெளிநாடு ஒன்றில் விமான உற்பத்தி நிறுவனம் ஒன்றின் சிறு விமானமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பாகங்கள் பொருத்தப்பட்டு விமானம் முழு வடிவத்தினைப் பெறுகின்றது.

பின்னர் அந்த விமானம் பலபாகங்களாகப் பிரிக்கப்பட்டு கொள்கலன் ஒன்றில் அடைக்கப்படுகிறது.

அந்த விமானம் நீலம், வெள்ளை நிற வர்ணத்தில் அமைந்துள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் வெளிநாட்டவர் இருவருடன் ஆசியாவைச் சேர்ந்த இருவர் உள்ளனர். அவர்களை விடுதலைப்புலிகளின் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர்களென சமன்குமார இதன்போது குறிப்பிட்டார்.

பின்னர் இந்தக் கொள்கலனில் விமானம் அடைக்கப்பட்டது. அந்தக் கொள்கலன் பின்னர் வன்னிப் பகுதியில் பிரிக்கப்பட்டு விமானத்தின் பாகங்கள் பொருத்தப்படுகின்றது. விமானம் முழுவடிவம் பெற்று அது பரீட்சித்துப் பார்க்கப்படுகின்றது.

வீதியொன்றில் இது பரீட்சித்துப் பார்க்கப்பட்டு விமானம் பறக்கின்றது. இந்த வீதியை ஏ-9 வீதியென சமன்குமார குறிப்பிட்டார். பின்னர் விமானத்தை நி[illegible]துவதற்குரிய கூடாரம் அமைக்கப்பட்டு அதனுள் நிலத்தடி அறைகள் அமைக்கப்படுகின்றது. விமானத்திற்கு பச்சை நிற வர்ணம் பூசப்பட்டு அது இராணுவ போர் விமானங்கள் போலக் காட்சி தருகின்றது.

அதன்பின்னர் விமானம் வானில் பறக்க விடப்படுகின்றது. இவ்வாறு பறக்க விடப்பட்டு விமானத்திலிருந்து பதிவு செய்யப்பட்ட வீடியோக்களில் கீழே காடு போன்று பச்சை பசேல் என்ற இடம் தெரிந்தது.

பின்னர் காடாக இருந்த இடங்கள் சுத்தம் செய்யப்பட்டு விமான ஓடுபாதை அமைக்கப்பட்டு அதற்குரிய சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டது.

இதன்பின்னர் சர்வதேச விமான ஓடுபாதைகளை ஒத்த ஓடுபாதையில் அந்தச் சிறுவிமானத்தை சீருடை அணிந்த இருவர் இயக்கிப் பறக்கின்றனர்.

விமான ஓடுபாதை அமைந்த பகுதியை முல்லைத்தீவு எனவும் விமானத்தை இயக்கியவர்கள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் எனவும் சமன்குமார குறிப்பிட்டார்.

பின்னர் அந்த விமானங்கள் கொழும்பில் தாக்குதல் நடத்தியபோது ராடர் மூலம் பதிவு செய்யப்பட்ட காட்சிகளையும் சமன்குமார காண்பித்தார்.

அவற்றை விடுதலைப் புலிகளின் ஒளித் தொகுப்புடன் தான் இணைத்ததாகவும் சமன்குமார தெரிவித்தார். எனினும் இந்த வீடியோ இங்கு முழுமையாக ஒளிபரப்பப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுரஆழ்வார் ஆலயச்சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் "சனாதனதர்மம்-5" என்னும் விடயம்பற்றி ஓய்வுபெற்ற அதிபர் ரி.ரி.சண்முகநாதன் ஆன்மீகசொற்பொழிவாற்றவுள்ளார். (ஸ்ரீ-3-35)

## கடும் குளிரும் அடை மழையும் பெப்ரவரி மாதம் வரை தொடரும்
### வளிமண்டலவியல் திணைக்கள பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கடும் குளிரும் அடைமழையும் எதிர்வரும் பெப்ரவரிமாதம் வரை தொடரலாம். எனவே, முதியோர்களும் குழந்தைகளும் மிகவும் அவதானத்துடனிருக்க வேண்டும்.

அத்தோடு மத்திய மாகாணத்தில் வெப்பநிலை மேலும் குறைவதற்கு வாய்ப்புகள் உள்ளன என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜி.பி. சமரசிங்க தெரிவித்தார்.

இதுதொடர்பாக, நேற்றுமுன்தினம் இடர் முகாமைத்துவ அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தொடர்ந்தும் தெளிவுபடுத்தலில் பணிப்பாளர்நாயகம் ஜி.பி. சமரசிங்க கூறுகையில்,

பொதுவாக மட்டக்களப்பில் வருடத்திற்கு 1650.9 மில்லிலீற்றர் மழைவீழ்ச்சியே காணப்படும். ஆனால், கடந்த 40 நாட்களுக்குள் 1859 மில்லி லீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. அதேபோன்றுதான் கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் கடும் குளிரான காலநிலை நிலவுகின்றது.

கடந்த 1950ஆம் ஆண்டிற்குப்பின் ஆகக் குறைந்த வெப்ப நிலையாக 18.8 பாகை செல்சியஸ் கொழும்பில் நேற்று முன்தினம் பதிவாகியுள்ளது.

அதேபோன்றுதான் நுவரெலியாவிலும் கடந்த 1929 ஆம் ஆண்டிற்குப் பின் 7.9 பாகை வெப்பநிலை நேற்று முன்தினம் பதிவாகியுள்ளது.

கடந்த 1929 ஆம் ஆண்டில் நுவரெலியாவில் 2.6 பாகையான மோசமான வெப்பநிலையே பதிவாகியிருந்தது.

எவ்வாறாயினும் காலநிலை என்பது கடல், நிலம் மற்றும் வாயுக்கோளம் போன்றவற்றை உள்வாங்கப்பட்ட ஒரு விடயமாகும். பொதுவாக டிசம்பர், ஜனவரி மாதங்களில் சாதாரண குளிர்நிலை காணப்படும்.

ஆனால், வழமைக்கு மாறாக தற்போது காணப்படும் சீரற்ற காலநிலைக்கு லாநினா என்ற காலநிலை யைக் குறிப்பிடலாம்.

பருமனான முகில் மற்றும் பருவப் பெயர்ச்சிகளினால் சூரியக்கதிர் வீச்சு பூமியை வந்தடைய ஏற்படும் செயற்பாடுகளாலேயே லாநினா போன்ற காலநிலை ஏற்படுகிறது. பொதுவாக மேற்படி காலநிலையின் தாக்கம் இம்முறை இலங்கைக்கு சற்று அதிகமாகவே உள்ளது. இந்நிலை எதிர்வரும் பெப்ரவரி மாதம் வரை தொடரலாம் எனக் கூறினார். (ஸ்ரீ-2)

## இன்டர்நெட் வேகத்தை அறிந்துகொள்ள வசதி

(கொழும்பு)

நாட்டிலுள்ள இன்டர்நெட் பாவனையாளர்கள் தமது கணனி மூலமே தங்களுக்கு உண்மையில் எந்தளவுவேகத்தில் இன்டர்நெட்சேவை கிடைக்கின்றது என்பதை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இம் மாதம் முதல் இந்தத்திட்டம் அமுலுக்கு வரவுள்ளது.HSDPA மற்றும் 4G தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி இன்டர்நெட் பாவனையாளர்கள் தமக்கு சேவையாளர்கள் வழங்கும் உண்மையான வேகத்தை தெரிந்து கொள்ளமுடியும்.

அண்மையில் நடத்தப்பட்ட சில பரிசோதனைகள் மூலம் இன்டர்நெட் சேவைழங்கும் நிறுவனங்கள் தமது வாடிக்கையாளர்களுக்கு உறுதியளித்ததன் பிரகாரம் உண்மையான வேகத்தில் சேவைகளை வழங்குவதில்லை என்பது தெரிய வந்துள்ளது. (ஸ்ரீ-2)

# பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு 4 பொலிஸார் உயிரிழப்பு



வடமேற்கு பாகிஸ்தானில் பயங்கரவாதிகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் நேற்று முன்தினம் நான்கு பொலிஸார் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தான் பழங்குடியினர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசமான வஸிரிஸ்தானை அண்டிய பன்னு மாவட்டம் வடமேற்கில் உள்ளது. இப்பகுதியானது தலிபான், அல்கொய்தா பயங்கரவாதிகளின் புகலிடமாகக் கருதப்படும் இடமாகும்.

இந்தப்பகுதியில்பொலிஸ் வாகனத்துக்கு எதிரே நேற்று முன்தினம் தொலைவிலிருந்து இயக்கிய வெடிகுண்டு தாக்குதலில் மூன்று பொலிஸார் கொல்லப்பட்டனர். ஐந்து பேருக்குக் காயம் ஏற்பட்டு பன்னு நகரில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்து பொலிஸார் அந்தப் பகுதியில் நடத்திய தீவிர சோதனையில் இரண்டு பைகளில் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டுகள் சிக்கின. பொலிஸார் அவற்றை செயலிழக்கச் செய்தனர்.

மற்றொரு சம்பவத்தில் பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் எப்போதும் பதற்றம் நிலவி வரும் கைபர் பழங்குடிப் பிரதேசத்தில் ஒரு சோதனைச் சாவடியைக் குறி வைத்து பயங்கரவாதிகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் ஒரு பொலிஸார் உயிரிழந்தார். நான்கு பேருக்குக் காயம் ஏற்பட்டுள்ளது.

பன்னு பகுதியில் பொலிஸாருக்கு எதிராக நடக்கும் இரண்டாவது தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 12 ஆம் திகதி மிர்ய்ன் எனும் இடத்திலுள்ள பொலிஸ் நிலையத்தின் மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது. வெடிகுண்டுகள் கொண்ட வாகனம் ஒன்றை ஓட்டி வந்து பொலிஸ் நிலையம் மீது மோதியதில் 20 பேர் கொல்லப்பட்டனர்.

இதில் பெரும்பாலும் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு அடுத்திருந்த பள்ளிவாசலில் தொழுகை செய்து கொண்டிருந்த சிலரும் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். (ஸ்ரீ-2)

# லெபனானில் பிரதமர் ஆட்சி கவிழ்ந்தது

லெபனானில் ஆளும் கட்சிக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து அந்நாட்டு பிரதமர் ஷாத் ஹராரியின் ஆட்சி கவிழ்ந்துள்ளது.

லெபனானில் பிரதமர் ஷாத் ஹராரியின் அமைச்சரவையில் உள்ள ஹிஸ்புல்லா அமைச்சர்கள் 11 பேர் தங்களது பதவியை இராஜினாமா செய்து ஆதரவினை மீளப் பெற்றனர்.

இதனால் அரசு பெரும்பான்மையை இழந்தது. இந்நிலையில் பிரான்ஸ் சென்றிருந்த ஹராரி தனது ஆட்சியை நிலை நாட்ட அதிபர் சர்கோசியின் உதவியை நாடினார். இது தொடர்பாக பாரீசில் பேச்சுவார்த்தை நடத்தியும் பலனில்லை. இதனால் ஆட்சி கவிழ்ந்தது. எனினும் லெபனான் ஜனாதிபதி மைக்கேல் சுலைமான் புதிய ஆட்சி அமையும் வரை தற்காலிக பிரதமராக பொறுப்பேற்குமாறு ஹராரியை கேட்டுக் கொண்டுள்ளார். (ஸ்ரீ-4)

# மரபணு மாற்றப்பட்ட கோழி விஞ்ஞானிகள் முயற்சி

(எடின்பர்க்)

மரபணு மாற்றப்பட்ட காய்கறி, பருத்தி என மக்கள் மத்தியில் பல்வேறு நுகர் பொருட்கள் புளக்கத்தில் வந்தாகிவிட்டது.

இந்த வரிசையில் தற்போது விஞ்ஞானிகளின் ஆய்வு கூடத்தில் இடம் பிடித்திருப்பது மரபணு மாற்றப்பட்ட கோழி போன்ற பறவைகள்.

திடீர் திரென ஏற்படும் பறவைக்காய்ச்சல் நோய் காரணமாக சர்வதேச அளவில் கறிக் கோழி உற்பத்தி விற்பனை பெரும் சரிவை காண்கிறது.

கோழி, வாத்து போன்ற பறவைகள் இவ்வகை பர்ட் ப்ளூவால் தாக்கப்படுகின்றன. இதனை தவிர்க்கும் வகையில் விஞ்ஞானிகள் புது முயற்சியில் இறங்கியுள்ளனர்.

மரபணு மாற்றப்பட்ட பறவைகளை உருவாக்குவதே அவர்களது ஆராய்ச்சி ப்ளூ கிருமி தாக்காத அளவில் மரபணுக்களை மாற்றம் செய்து கோழிகளை உற்பத்தி செய்யவிருக்கின்றனர். (ஸ்ரீ-2)

# நிலநடுக்க சேதத்திற்கும் ஊழலுக்கும் தொடர்பு

## ஆய்வுகளில் புதிய தகவல்

நிலநடுக்கத்தினால் ஏற்படும் சேதங்களுக்கும் ஊழலுக்கும் தொடர்பு இருப்பதாக புதிய ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இயற்கை பேரழிவான நிலநடுக்கத்தினால் ஏற்படும் விளைவுகள் குறித்து லண்டன் இம்பீரியல் பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் நிக்கோலாஸ் அம்பிரேசஸ், கொலராடோ பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் ராகேர் பில்காம் உள்ளிட்டோர் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக ஆய்வுகளை மேற்கொண்டனர்.


இந்த ஆய்வில் கூறியிருப்பதாவது, கடந்த 30 ஆண்டுகளாக உலகின் பல்வேறு பகுதிகளில் நடந்த நிலநடுக்கங்களில் சிக்கி உயிரிழந்தவர்களில் 83 சதவீதம் பேர் கட்டட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்துள்ளனர். நிலநடுக்கத்தால் ஏற்படும் மிகப்பெரிய சேதம் கட்டடங்கள் இடிந்து விழுவது தான். 1980 ஆம் ஆண்டில் தொடங்கி சராசரியாக ஆண்டுக்கு 18 ஆயிரத்து 300 பேர் நிலநடுக்கங்களில் உயிரிழந்துள்ளனர்.

இதற்குக் காரணம் செல்வ செழிப்புமிக்க நாடுகளே. தங்கள் நாட்டில் நடக்கும் கட்டடங்களின் கட்டுமானப் பணிகளை கவனிப்பதில்லை. மண் திண்மை இல்லாத இடங்களில் கட்டடங்கள் கட்ட அனுமதி கொடுப்பது, தரமற்ற கட்டுமானப் பொருட்களைக் கொண்டு கட்ட அனுமதியளிப்பது உள்ளிட்ட காரணங்களால் நிலநடுக்கம் ஏற்படும் போது அவை மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகின்றன.

பெரும்பாலான நாடுகள் இந்த விடயத்தில் மெத்தனம் காட்டினாலும் சில நாடுகளில் இந்த விதிமுறைகள் கட்டாயமாக கடைபிடிக்கப்படுகின்றன.

கடந்த 2010 ஆம் ஆண்டில் நியூசிலாந்து நாட்டில் ரிக்டர் அளவுகோலில் 7 புள்ளி அளவுக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது.

ஆனால் இந்த நிலநடுக்கத்தினால் உயிரிழப்பு ஒன்று கூட ஏற்படவில்லை. பெரிய அளவில் சேதங்களும் ஏற்படவில்லை. ஆனால் கரீபியன் கடல் பகுதியில் அமைந்துள்ள ஹெயிட்டி நாட்டில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் காரணமாக இலட்சக்கணக்கானோர் உயிரிழந்தனர். கட்டுமானத் துறையில் பல இலட்சம் கோடி ருபாய் பணம் புழங்குகிறது. இந்தத் தொகை ஆண்டுதோறும் பல மடங்கு அதிகரித்து வருகிறது. எனவே இதில் முறைகேடுகள் நடப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று நிபுணர்கள் ஒப்புக்கொள்கின்றனர். இவ்வாறு அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)



மேற்கு ஆபிரிக்க நாடான ஐவரி கோஸ்ட்டில் நிலையான ஆட்சி அமையாததால் அவ்வப்போது இராணுவத்தினருக்கும் வன்முறையாளர்களுக்கும் இடையே கலவரம் நடைபெற்று வருகிறது. அபித்ஜான் நகரில் ஐ.நா. அமைதிப்படைக்கு சொந்தமான வாகனங்களை வன்முறையாளர்கள் தீயிட்டு கொளுத்துவதை படத்தில் காணலாம்.


## வாக்காளர் இடாப்புத் திருத்தம்

2010ஆம் ஆண்டில் வாக்காளராக பதிவு செய்த உங்கள் பெயர் வாக்காளர் இடாப்பில் உள்ளதா என்பதை அறிந்து கொள்ள 2011, ஜனவரி மாதம் 03ஆம் திகதியிலிருந்து 31ஆந் திகதி வரை,




- மாவட்ட தேர்தல் செயலகம்,
- பிரதேச செயலகம்,
- கிராம உத்தியோகத்தர் அலுவலகம்,
- மாநகர சபை, பிரதேச சபை, நகரசபை,
- தபால் அலுவலகங்களில்

பார்வையிடலாம்.

- வாக்காளர் இடாப்பிலிருந்து அகற்ற உள்ள பெயர்ப் பட்டியல் (A)
- 2010ஆம் ஆண்டு புதிதாக சேர்த்துக் கொள்ளப்படுபவர்கள் பெயர்ப் பட்டியல் (B)
- 2009ஆம் ஆண்டு தேர்தல் ஆணையாளர் அத்தாட்சி படுத்தப்பட்ட வாக்காளர் இடாப்பு

போன்றவற்றை பரிசீலனை செய்து கொள்ளலாம்.

- உங்கள் குடும்பத்தினர் பெயர் உள்ளடக்கப்படவில்லையா?
- தங்களுடைய தேசிய அடையாள அட்டையின் இலக்கம் சரியாக குறிப்பிடப்படவில்லையா?

உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்.

**தேவையான படிவத்தினை மேற்குறிப்பிட்ட அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.**

ஞாபகத்தில் கொள்ளுங்கள்!

2010 ஆம் ஆண்டில் வாக்காளர் இடாப்பில் பதியாதோர் இக் காலப்பகுதியில் வாக்காளர் பதிவினை மேற்கொள்ளலாம்!!

இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு குறிப்பிட்ட இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தர்ஷினி 077 4949992
அல்லது
011 2514441 / 2

சுதந்திரமான நியாயமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு
இல-12/3, றொபேட் டெரஸ், றொபேட் குணவர்த்தன மாவத்தை, கொழும்பு-06.
தொலைபெசி இல-011251444-2, பக்ஸ் இல-011251443
email:paffrel@sltnet.lk , Website: www.paffrel.lk

பஃவ்ரல்
வாக்காளர்களுக்கு பஃவ்ரல் வழங்கும் மற்றுமோர் சேவை.
Kingdom of the Netherlands

# அனைவருக்கும் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்



# ஆங்கில மொழி மூல ஆசிரியர் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

- ★ கலைமகள் சர்வதேச கல்லூரி தனக்கு தேவையான ஆசிரியர்களை தனது ஆசிரியர் பயிற்சி கல்லூரி மூலம் உருவாக்கி நியமித்துக் கொள்வது வழமையான நிகழ்வு.
- ★ 2009 டிசம்பரில் இக் கல்லூரியில் இணைந்த 48 மாணவர்கள் தமது கற்கை நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து பட்டமளிப்பு நிகழ்வின் பின் எமது பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளார்கள்.
- ★ 2011ஜனவரி 8ஆம், 9ஆம் திகதிகளில் புதிய பிரிவு மாணவர்களை தேர்வு செய்யும் நோக்கில் நேர்முகத்தேர்வு நடைபெற்றது. இதில் தோற்றிய 162 மாணவர்களில் ஆற்றலும் தகுதியுமுடைய 52 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். இன்னும் 48 மாணவர்களை தெரிவுசெய்து பயிற்சி அளிக்க வேண்டியதேவை எமக்கிருப்பதால் ஆற்றலும் தகுதியுமுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## விண்ணப்பிக்க விரும்புவோர்:-

- ➤ க.பொ.த.(உ/த) ஏதாவது ஒரு பிரிவில் சித்தியெய்தியவராக இருக்க வேண்டும்.
- ➤ க.பொ.த.(சா/த) அல்லது க.பொ.த(உ/த) ஏதாவது ஒன்றில் ஆங்கிலப்பாடத்தில் சித்தி அடைந்தவராக இருக்கவேண்டும்.
- ➤ 2011 ஜனவரியில் 32 வயதைத் தாண்டாதவராக இருக்க வேண்டும்.

## நேர்முகத் தேர்வு

- ➤ 19.01.2011 புதன்கிழமை காலை 9மணி முதல் பிற்பகல் 02மணிவரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.
- ➤ நேர்முகத்தேர்விற்கு உங்களுடைய தகுதிச் சான்றிதழ்களின் மூலப்பிரதியுடன் போட்டோ பிரதிகளையும் எடுத்துவர வேண்டும்.

☞ இத் திகதி மேலும் நீடிக்கப்படமாட்டாது.

(C-2153)

மேலதிக விபரங்களுக்கு:-

KALAIMAGAL INTERNATIONAL COLLEGE
NOTHING IS IMPOSSIBLE

# KALAIMAGAL International College

CHURCH LANE,
KOKUVIL EAST, KOKUVIL.

T.P.:0213215785
Mob:0778834592

# தைப்பொங்கல் சிறப்புமலர்-15.01.2011




www. mideamart.com

**Midea Electro Mart**

Authorized Dealer for **Abans** Ltd.

எங்கும் மங்களம் பொங்கிட
எம் இனிய பொங்கள் வாழ்த்துக்கள்



Toshiba mini Laptop
Atom Intel 1.6Ghz
Dos
1GB
250GB
Nill
128MB
webCamera With Mic
10.1"
WIFI Blue Tooth
Rs.46,900.00



COMPACO620 Laptop
Intel Core 2 Duo 2.2
Dos
2GB
320GB HDD
DVD Writer
796MB
web Camera With Mic
15.6"
WIFI Blue Tooth
Rs.71,900.00

ACER5742 Laptop
Intel core i3
Win 7 Home Basic
VGA 1GB HD Grap
RAM 3GB
H.D 500GB
web Camera With Mic
Wifi
DVD super multi
6-cell li-on battery
Rs.75,000.00

HP Probook 4520s
Intel core i3
Win7 Home Basic
VGA 1GB HD Grap
RAM 2GB
G.D 320GB
DVDWriter
Wifi
web Camera With Mic
LCD 15.6"
Rs.90,900.00

| COMPUTER | INTEL DUAL CORE | INTEL CORE 2 DUO | INTEL CORE i3 | INTEL CORE i5 | HP Pavillon dv6t 3200 |
|---|---|---|---|---|---|
| Processor | Intel Dualcore 3.0 GHZ | Intel core 2 Duo 2.93 GH | INTEL CORE i3 3.06Ghz | Intelcore i3 3.06Ghz | Intelcore i3 |
| Mother board | Intel Chipset G31 | Intel Chipset G31 | Intel DH55PJ | Gigabyte Board | Win 7 Home Basic |
| Memory | 1GB DDR-II, 800 MHZ | 1GB DDR-II, 800 MHZ | 2GBDDR -III | 2GBDDRIII | VGA 1GB HD Grap |
| Hard disk | 320 GB SATA-7200 RPM | 320 GB SATA-7200 RPM | 320GB SATA-7200RPM | 500GB SATA-7200RPM | RAm 4GB |
| Disk drive | LG DVD Writer | LG DVD Writer | ATX 500W E marck | ATX 500W E marck | HD 500GB |
| Casing | ATX 500W E marck | ATX 500W E marck | LG DVD Writer | LG DVD Writer | Web Camera with Mic |
| Monitor | 15.5" Acer LCD | 19" LG LED | 18.5" Samsung LED | 18.5" Samsung LED | DVD Super Multi |
| Key board | Prolink USB, PS/2 | Prolink USB, PS/2 | Prolink USB, PS/2 | Prolink USB, PS/2 | LCD 15.6 |
| Mouse | Sony Optical USB/Ps2 | Sony Optical USB/Ps2 | Sony Optical USB/Ps2 | Sony Optical USB/Ps2 | Wifi |
| Speaker | Multimedia Speaker | Multimedia Speaker | Multimedia Speaker | Multimedia Speaker | 6-cell li-on battery |
| Price | Rs.41,900.00 | Rs.50900.00 | Rs.55,900.00 | Rs.65,900.00 | Rs.104,900.00 |

**Abans**
நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோகம்




**No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.**
**TEL: 021 222 4566, FAX: 021 222 1646**
**E-mail: midea21@gmail.com**



உழவர் திருநாளாம்
தைப் பொங்கல் திருநாளில்
கொமர்ஷல் வங்கியின்
வாழ்த்துக்கள்



COMMERCIAL BANK

அரசியல் பிழைத்தோருக்கு
அறம் கூற்றாகும்
- சிலப்பதிகாரம்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அறம் பிழைத்தார் பொங்கல் பிடிக்கலையோ கதிரவா!

மகாத்மா காந்தியின் தாய், ஒருமுறை விரதம் அனுஷ்டித்தார். சூரிய பகவானை வணங்கிய பின்பே ஆகாரம் உண்பது விரத முறையாக இருந்தது.

எனினும் அன்று முழுவதும் கதிரவன் காரிருளில் மறைந்திருந்தான். தனயன் மோகனதாஸ் (மகாத்மா காந்தி அடிகள்) தாயின் விரத நோன்பை முடித்து வைப்பதற்காக ஆகாயத்தையே பார்த்து நின்றார்.

ஒரு கணப் பொழுதில் கதிரவன் காட்சிகொடுக்க, அம்மா... அம்மா... என்று குரல் கொடுக்கின்றார். சூரிய பகவானை தரிசிப்பதற்காக வீட்டிற்குள் இருந்த தாய் வெளியே ஓடி வருகின்றாள். கதிரவனோ மீண்டும் மறைந்து விடுகின்றான்.

விரதத்தில் ஏதேனும் பங்கம் உண்டோ என்று தாயும் தனயனும் வேதனை கொள்கின்றனர்.

ஒரு விரதத்தின் போது கதிரவனைக் காணமுடியவில்லை என்பதற்காக அவர் பட்ட கவலையை இங்கு ஏன் கூறுகிறீர்கள் என்று நீங்கள் முணுமுணுப்பதும் கேட்காமலில்லை. அதற்கும் காரணம் உண்டு. சூரிய பகவானை தரிசிக்க முடியவில்லையே என்று கவலை கொண்ட ஒருவராலேயே பாரத தேசத்திற்கு விடுதலை கிடைத்தது.

அவரையே உலகம் மகாத்மா என்று போற்றியது. உலக நாடுகள் அந்த அகிம்சாமூர்த்தியின் திருவுருவச் சிலையை தங்கள் நாடுகளில் நிறுவினர்.

பார்த்தீர்களா! ஒருவர் அகிம்சை வழியில் செல்ல வேண்டுமாயின் அவர் கவலையும், இரக்கமும் உடைய மனநிலை கொண்டவராக இருக்கவேண்டும்.

எதற்கும் கவலையில்லை. எதற்கும் இரக்கமில்லை என்ற மனநிலை யாரிடம் இருக்கிறதோ அவரிடம் மனிதாபிமானத்தை- மனிதப் பண்பை எதிர்பார்க்க முடியாது.

எனவே மனிதர்கள் மனிதர்களாக வாழவேண்டுமாயின், அகிம்சையை கடைப்பிடிக்க வேண்டும். அகிம்சையைக் கடைப்பிடிப்பதற்கு இறை நம்பிக்கையும், சமய அனுட்டானங்களும் அவசியம்.

கூடவே சமய அனுட்டானங்களை போலியாக கடைப்பிடிப்பதும் அதர்மத்தின் பாற்பட்டதாகும்.

ஆக! இன்றைய தைப்பொங்கல் திருநாளில் முக்கிய பிரமுகர்கள் ஆசிகளும், வாழ்த்துக்களும் தெரிவிக்கும் அதேநேரம், இறை நம்பிக்கையுள்ளதும், நல்ல சிந்தனையைக் கொண்டதுமான மக்கள் சமூகத்தை உருவாக்கவும் இவர்கள் பாடுபடுவதும் அவசியமாகும்.

இன்றைய சூரியப் பொங்கலின்போது கிழக்கு மாகாண மக்கள் சொல்லொணாத் துன்பத்தை அனுபவிப்பதும், எங்கள் பொங்கலை காணக் கதிரவன் மறுப்பதும் எங்கள் செயல்களுக்கு எதிரான அறிகுறிகள் என்பதை உணர்வது எதிர்காலத்திலேனும் தர்ம வழியில் நாம் வாழ்வதற்கு உதவுவதாக அமையும்.

# இந்திய மீனவர்கள் மீது படைபலத்தை பிரயோகிப்பதை இலங்கை நிறுத்த வேண்டும்

## இந்திய மத்திய அரசு காட்டம்

(புதுடில்லி)

இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவது நியாயமற்றது. படைபலத்தை பிரயோகிப்பதை இலங்கை அரசு தவிர்க்க வேண்டும் என இந்திய மத்திய அரசு சார்பில் இலங்கையிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இந்திய மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் பாக்கு நீரிணையில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர் இலங்கை கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டதாக தகவல் கிடைத்துள்ளது.

இந்தத் தகவல் கிடைத்ததும் இலங்கையில் உள்ள எங்கள் தூதரக அதிகாரி விஷ்ணு பிரசாத் இலங்கை அரசின் கவனத்துக்கு இதை கொண்டு சென்றார். இது தொடர்பாக இந்திய அரசு சார்பில் கவலையையும் வருத்தத்தையும் அவர் தெரிவித்தார். இதுபோன்ற சூழ்நிலையில் துப்பாக்கிச் சூடு நடத்துவது போன்ற படை பிரயோகத்தை இலங்கை அரசு தவிர்க்க வேண்டும்.

இந்திய, இலங்கை இடையேயான கடல் பகுதியில் மீன் பிடிக்கும் மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன் முக்கியமானது. இதுபோன்ற பிரச்சினைகளுக்கு அரசு முக்கியத்துவம் அளிக்கும். இதுபோன்ற நேரங்களில் துப்பாக்கிச் சூடு நடத்துவதை தவிர்க்க வேண்டும் என இலங்கை அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

இந்த விவகாரத்தில் 2008 ஒக்டோபரில் இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை பின்பற்ற வேண்டும். இலங்கை கடற்படை அதிகபட்ச எதிர்ப்பைக் காட்டக்கூடாது. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் இது குறித்து முழு விபரம் தரக் கேட்டு வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா கேட்டிருக்கிறார் என்று கூறப்பட்டது.

இந்திய அரசின் இந்த அறிக்கைக்கு இலங்கை சார்பில் பதில் அளிக்கப்பட்டுள்ளது. இலங்கை கடற்படை செய்தி தொடர்பாளர் அதுலா செனார்த் செய்தியாளர்களிடம்கூறுகையில், இந்திய மீனவர் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதுபோன்ற துப்பாக்கிச் சூடு சம்பவம் நடந்ததாக எங்களுக்கு எந்தத் தகவலும் இல்லை. இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தவில்லை என்றார்.

இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்கியதற்கு மத்திய அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. கடந்த புதன்கிழமை கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தியதில் ஒரு மீனவர் இறந்தார். மற்றொரு மீனவர் பலத்த காயம் அடைந்தார்.

இந்நிலையில் இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் நடத்திய தாக்குதலுக்கு கொழும்பில் உள்ள தூதரகம் மூலமாக மத்திய அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. “இந்திய மீனவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் நியாயமற்றது. இலங்கை கடற்படையினர் இதுபோன்ற செயல்களில் ஈடுபடாமல் அந்நாட்டு அரசு தடுக்க வேண்டும். இரு நாட்டு அரசுகள் இடையே 2008 ஒக்டோபரில் ஏற்பட்ட உடன்பாட்டின்படி இலங்கை கடற்படையினர் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும். மீனவர்கள் உயிரிழப்பு சம்பவங்கள் நிகழாமல் தடுக்க வேண்டும்” எனக் கூறியுள்ளது. (ஸ்ரீ-2)

# யாழ்.மாநகர சபை தனது சேவைகளை விரிவாக்கம் செய்ய வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரம் சுத்தமாக பேணப்படும் அதேவேளை மக்களுக்கான சேவைகளும் பூரணமாக நிறைவு செய்யப்பட வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.மாநகரசபை கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற நகரின் சுத்தம், சுகாதாரம் தொடர்பிலான கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாநகரசபையின் சேவை போதுமானதாக இல்லை என சுட்டிக் காட்டிய அமைச்சர் மாநகரசபையானது வருமானத்தை பெருக்கிக் கொள்ளும் அதேவேளை மக்களுக்கான அதனது சேவைகளையும் விரிவாக்கம் செய்யவேண்டும் என்பதுடன் நகரின் சுத்தம், சுகாதாரம் தொடர்பில் மாநகரசயினது தேவைகளையும், பிரச்சினைகளையும் இனங்கண்டு அவற்றுக்கு உரிய வகையில் தீர்வு காண வேண்டும்.

மேற்பார்வையாளர்கள் அலுவலகக் கடமைகளுடன் நின்று விடாது முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களையும் நேரில் சென்று பார்வையிட வேண்டியதும் முக்கியமானது.

ஒவ்வொருவரும் தமக்கான பொறுப்புக்களை பொறுப்புணர்வுடனும் கடமையுணர்வுடனும் ஆற்ற வேண்டுமென்பதுடன் அடுத்துவரும் 10 நாட்களுக்குள் பாரிய மாற்றத்தைக் காணக் கூடிய வகையில் எல்லோரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இருக்கின்ற வளங்களை வைத்துக் கொண்டு வேலைத்திட்டங்களை செம்மையாகச் செய்ய வேண்டும் என்பதுடன் மேற்பார்வையாளர்கள் புதிதாக நியமனம் செய்யும் பட்சத்தில் எல்லோரும் அவருக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கும் பட்சத்திலேயே எதிர்காலத்தில் சிறப்பாக வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும் .

ஊழியர் முன்கூட்டி உரிய அதிகாரிகளிடம் அறிவித்து அனுமதி பெற்றுக் கொண்ட பின்னரே விடுமுறை எடுக்க வேண்டுமெனவும் பணியாளர் ஒருவர் விடுமுறை எடுக்கும் பட்சத்தில் மற்றொரு பணியாளர் பதில் கடமை செய்ய வேண்டுமெனவும் இந்நடைமுறை இன்றிலிருந்தே நடைமுறைக்கு வருவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, மாநகர ஆணையாளர் உள்ளிட்ட துறைசார்ந்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2)

# முறைசாராக் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன

(யாழ்ப்பாணம்)

யா/யாழ் இந்து மகளிர் கல்லூரியில் அலங்காரப் பொருள் உற்பத்தி, மனை முகாமைத்துவம் (உடையமைத்தல், ஐசிங், தலை அலங்காரம், சமையற்கலை), ஆங்கிலம், சிங்களம் ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் முடிவு திகதி எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை என பாடசாலை அதிபர், திருமதி.வி.பேரின்பநாதன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



அலைகள் சிறிதாக இருந்தாலும் அவை கடலினின்றும் வேறுபட்டவை அல்ல. கடலின் ஒரு பகுதியே. அதுபோல நாமும் மனிதர்களாயினும் தெய்வ சொரூபங்களே. கடலில்லையேல் அலையுமில்லை.

இந்திய நாட்டின் இலட்சியப் பெண் தாயே! இலட்சியத்தின் முதலும் முடிவும் தாய்மைதான். ஒரு இந்து, பெண்ணைத் தாயாக நினைக்கிறான். பெண் என்ற சொல் அவன் உள்ளத்தில் தாய்மை உணர்ச்சியைத் தான் எழுப்புகிறது. இறைவனை நாம் அம்மையே! தாயுமானவனே! என்று அழைக்கிறோம். இந்தியப் பெண்மையின் இலட்சியம், அதன் குறிக்கோள் தாய்மை தான். பெண்மையின் சக்தி அனைத்தும் தாய்மையில் அடங்கியிருப்பதாக ஒரு பாமரனும் கருதுகிறான். தன்னலத் தியாகம், துன்பங்களை அன்புடன் ஏற்றல், எதையும் வழங்கும் கருணை – இவ்வற்புதப் பண்புகளின் திருவுருவம் அன்னை அல்லவா?

ESPN

அனைவருக்கும் துன்பம் அகன்று
இன்பம் பெருக தைப்பொங்கல்
திருநாளில் வாழ்த்துகின்றோம்




யாழ். நகரில்
வியாபாரத்துறையில்
பல வருடங்களாக
அனுபவம் பெற்ற
நிறுவனத்தினர்
தற்போது
கிளிநொச்சியிலும்

Lumala

யப்பானிய தொழில்நுட்பத்துடன் புத்தம் புதிய லுமாலா ஆண், பெண் ஸ்போட்ஸ்,யுனியர் துவிச்சக்கர வண்டிகளும், அதன் உதிரிப்பாகங்களும்.
இந்தியாவில் உற்பத்தியாகி உலகத் தரக்கட்டுப்பாட்டின் ISO 9001 சான்றிதழ் பெற்ற புத்தம் புதிய கீரோ
ஆண்,பெண் ஸ்போட்ஸ்,யுனியர் மிதிவண்டிகளும் உதிரிப்பாகங்களும்.
வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மௌவுன்டின்,சொப்பர் மிதிவண்டிகளும்,
பேபி வோக்கர், பேபி பிறேம், பேபி கார் வகைகளும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்





இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்

52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஏ-9 வீதி,கரடிப்போக்கு,
கிளிநொச்சி.

Tel: 021 222 3096 Fax: 021 222 4394

தை பிறந்தால் வழி பிறக்கும்

தைப்பொங்கல் திருநாள் இலங்கைவாழ் மக்கள்
அனைவரின் வாழ்விலும் சுபீட்சத்திற்கு வழிகோலுவதாக!
LOLC உங்களுக்கு இனிய தைப்பொங்கல்
வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

LOLC
அபிவிருத்திப்
பாதையின் முன்னோடி



• சிறிய மற்றும் விவசாயக்கடன் • சேமிப்பு மற்றும் வைப்பு • லீசிங் மற்றும் மோட்டார் வாகன நிதிச்சேவை
• அடகுச்சேவை • NRFC மற்றும் RFC கணக்கு • கடன் சேவை • இஸ்லாமிய நிதிச்சேவை • காப்புறுதி
• பங்குச்சந்தை • மோட்டார் வாகன ஒழுங்குப்படுத்தல் முகாமைத்துவம்


www.lolc.com

நம் விவசாயிகளும்
விளை செல்வங்களும்
செழிப்புடன் என்றும் நிறைந்திருக்க
நல் வாழ்வு செழிக்க அனைவருக்கும்
மக்கள் வங்கியின்
இனிய பொங்கல் வாழ்த்துக்கள்



2008 2009 2009
www.peoplesbank.lk
மக்கள் வங்கி

# பின்ச் அதிரடி; ஆஸி. பதிலடி இங்கிலாந்து போராட்டம் வீண்



(மெல்போர்ன்)

பின்ச்சின் அதிரடியினால் அரைச்சதத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணி 04 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இரண்டாவது இருபது-20 போட்டியில் வெற்றிபெற்று தொடரை 1:1 என்ற கணக்கில் சமநிலையாக்கியது.

அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 05 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடர், இரண்டு இருபது-20 மற்றும் 05 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் ஆஷஸ் தொடரை இங்கிலாந்து அணி 3:1 என்ற கணக்கில் கைப்பற்றியது. தொடர்ந்து நடைபெற்ற முதலாவது இருபது-20 போட்டியிலும் இங்கிலாந்துஅணி வெற்றி பெற்று தொடரை 1:0 என்ற கணக்கில் முன்னிலைபெற்றது.

இந்நிலையில் இரண்டாவதும் இறுதியுமான இருபது-20 போட்டி நேற்று மெல்போர்னில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 07 விக்கெட்டுக்களையிழந்து 147 ஓட்டங்களைக் குவித்தது.

அவுஸ்திரேலிய அணி 11.5 ஓவர்களில் 80 ஓட்டங்களை எடுத்து 05 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது.

எனினும் ஆறாவது வீரராக களமிறங்கிய பின்ச் அதிரடி அரைச்சதம் அடித்து அணியை பலமான நிலைக்குக் கொண்டுசென்றார். இதில் பின்ச் ஆட்டமிழக்காமல் 33 பந்துகளில் (04 பவுண்டரிகள், 02 சிக்ஸர்கள் உட்பட) 53 ஓட்டங்களையும், வோர்னர் 26 பந்துகளில் (03 பவுண்டரிகள் உட்பட) 30 ஓட்டங்கள்ளையும் பெய்ன் 21, வோட்ஷன் 17 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சுவான், யாட்டி ஆகியோர் தலா 02 விக்கெட்டுக்களையும், வோக்ஸ், ஷாஷட், பிரெஸ்மன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 148 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி இறுதிவரை போராடி ஆறு விக்கெட்டுக்களையிழந்து 143 ஓட்டங்களை மாத்திரம்எடுத்து 04 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் பெல் 30 பந்துகளில் (03 பவுண்டரிகள் உட்பட) 39 ஓட்டங்களையும் டேவிஸ் 29 ஓட்டங்களையும் றைட் 18, பிரஸ்மன் ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மிச்சல் ஜோன்சன் 03 விக்கெட்டுக்களையும் வோட்ஷன் 02 விக்கெட்டுக்களையும் தைட் 01 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி 02 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரை 1:1 என்ற கணக்கில் சமநிலையாக்கியது.

இப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்த பின்ச் ஆட்டநாயகனாத் தெரிவானார்.

இதேவேளை இப் போட்டியில் தோல்வியடைந்ததன் மூலம் இங்கிலாந்து அணி இருபது-20 போட்டியில் தொடர்ச்சியாக 09வது வெற்றியைப் பெறும் வாய்ப்பு பறிபோனது.

# பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம் அமைந்துள்ள இல.223, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள கீழைத்தேயக் கல்விக் கல்லூரியில் பொங்கல் விழா இன்று இடம்பெறும். பண்டித மாணவ கழகத்தினரால் நடத்தப்படும் இந்நிகழ்விற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (ந)

# வயாவிளான் ம.ம.வி ஸ்தாபகர் தினம்

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் (நவோதயப் பாடசாலை) ஸ்தாபகர் தினமும் ஆரம்பப் பிரிவு பரிசளிப்பு விழாவும் நாளை நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கே.கனகராஜா தலைமையில் நடைபெறும் ஸ்தாபகர் தின விழாவில் பிரதம அதிதியாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்வில் பாடசாலை மண்டபம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்படுகின்றது.

அத்துடன் தொடர்ந்து நடை பெறும் ஆரம்பப்பிரிவு பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கணக்காளரும் நெல்சிப்பின் நிதி முகாமைத்துவ நிபுணருமான எஸ்.யூ.சந்திரகுமாரன் கலந்து சிறப்பிக்கின்றார். (ந-5)

# இந்திய அணி எழுச்சி பெறுமா?

(ஜோகனஸ்பேர்க்)

இந்தியா, தென்னாபிரிக்கா அணிகள் மோதும் இரண்டாவது ஒருநாள் போட்டி இன்று ஜோகனஸ் பேர்க்கில் நடக்கிறது.

முதல் போட்டியில் அடைந்த தோல்வியிலிருந்து எழுச்சிபெற்று இன்று இந்திய அணி வெற்றிபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னாபிரிக்காவுக்குச் சென்றுள்ள இந்திய அணி 05 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. டர்பனில் நடந்த முதல் போட்டியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா 1:0 என்ற கணக்கில் தொடரில் முன்னிலை பெற்றுள்ளது.

டெஸ்ட் தொடரை சமநிலை செய்தும் இருபது-20 போட்டியில் வெற்றியும் பெற்ற இந்திய அணிக்கு முதல் போட்டியில் அடைந்த மோசமான தோல்வி பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் இரு அணிகள் பங்கேற்கும் இரண்டாவது ஒருநாள் போட்டி இன்று ஜோகனஸ் பேர்க்கில் நியூவான்டெரர்ஸ் மைதானத்தில் பகல் இரவு ஆட்டமாக நடக்கிறது.

ஏற்கெனவே சேவாக், காம்பீர், பிரவீன் குமார் என முன்னணி வீரர்கள் காயம் காரணமாக இத்தொடரில் பங்கேற்காத நிலையில் டர்பனில் தோனியின் வீரர்கள் துடுப்பாட்டம், பந்துவீச்சில் மிகவும் தடுமாறினர்.

இந்திய அணியின் பலமே துடுப்பாட்டம் தான் ஆனால் கடந்த போட்டியில் சச்சின், முரளி விஜய், யுவராஜ் சிங், ரோகித் சர்மா போன்றவர்கள் சொதப்லான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஏமாற்றினர்.

தென்னாபிரிக்க அணியைப் பொறுத்தவரையில் சகலதுறை வீரர் கலிஸ் இல்லாத குறையே தெரியவில்லை. கடந்த போட்டியில் முன்னணி வீரர்கள் அம்லா, டீ வில்லியர்ஸ், டுமினி ஆகியோர் அரைச் சதம் அடித்து மிரட்டினர். இவர்கள் இந்திய அணிக்கு மீண்டும் தொல்லைதரலாம். தவிர இங்ராம், அணித்தலைவர் சிமித், ஜெகன் போத்தா, மில்லரும் ஓட்டம் குவிப்பில் கைகொடுப்பார்கள் எனத் தெரிகிறது.

பந்துவீச்சில் ஸ்ரையின், மோர்னே மோர்க்கல், பார்னல், ரீசொற்சோபே என்ற நால்வர் கூட்டணிக்கு இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு பதில் செல்ல முடியவில்லை. வேகப் பந்துவீச்சிக்கு பெரிதும் ஒத்துழைக்கும் ஜோகனஸ் பேர்க்கில் இவர்கள் மீண்டும் சாதிக்கும் பட்சத்தில் இந்திய அணிக்கு சிக்கல்தான். தவிர தென்னாபிரிக்காவில் நடக்கும் தொடரின் முதல் போட்டியில் இந்திய அணி எப்போதும் மோசமான தோல்வியைத்தான் சந்தித்துள்ளது. இந்நிலையில் இன்று இந்திய வீரர்கள் எழுச்சி பெறுவார்கள் என்று நம்பப்படுகிறது. இம் மைதானத்தில் இதுவரை இரு அணிகள் மோதிய 61 ஒரு நாள் போட்டிகளில் தென்னாபிரிக்கா 37, இந்தியா 22ல் வெற்றி பெற்றுள்ளன. 02 போட்டிகளுக்கு முடிவு இல்லை.

# மக்களின் உன்னதமான வாழ்வுக்கு தைத்திருநாள் உதவட்டும்

## பொங்கல் செய்தியில் அமைச்சர் டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பதற்கு அமைய எமது மக்களின் ஒளிமயமான எதிர்காலம் சிறக்க இத் தைத்திருநாள் அமையும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

கடந்த காலயுத்தம்மற்றும் இயற்கைஅனர்த்தங்கள் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்கள் அமைதியான சூழலில் சமமான அதிகாரங்களையும் உயர்ந்த வாழ்க்கை நிலையையும் பெற்று வாழவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

தைத் திருநாளை ஒட்டி அமைச்சர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அழிவுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து ஆக்கங்களுக்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்ற இவ் வேளையில் ஒருசில சமூக சீர்கேடுகளும், அசம்பாவிதங்களும் எம்மை வேதனை கொள்ளச் செய்கின்றன.

இவை அனைத்தும் துடைத்தெறியப்படல் வேண்டும் என்பதற்காகவும் எமது மக்கள் ஒளிமயமானதொரு எதிர்காலத்தைப் பெற வேண்டும் என்பதற்காக நாம் தொடர்ந்து உழைத்து வருகின்றோம். அதேநேரம் கடந்த காலப் பாதிப்புக்களின் வடுக்களிலிருந்து மீள்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வந்த வேளையில் அண்மைக்கால இயற்கை அனர்த்தம் காரணமாக மீண்டும் பாரிய பாதிப்புக்களுக்கு உள்ளாகியிருக்கும் கிழக்கு மாகாண உறவுகளின் துயரங்களை நானும் எனது கட்சியினரும் பகிர்ந்து கொள்வதுடன் அவர்களுக்கான உதவும் திட்டங்களையும் நாடளாவிய ரீதியில் ஆரம்பித்துளோம்.

இம் மக்கள் இத் துயர நிலையிலிருந்து விரைவில் மீளவேண்டும் என்பதுடன் இம் மக்களுக்கு தங்களால் இயன்ற உதவிகளைச் செய்வதற்கு மனிதாபிமானம் கொண்ட அனைவரும் முன்வரவேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

இழப்புக்களின் வேதனையிலும், இயற்கை அனர்த்தங்களின் சோதனையிலுமிருந்து எமது மக்கள் மீண்டு ஒளிமயமானதொரு எதிர்காலத்தை நோக்கி முன்னேறுவதற்கான வாய்ப்புக்களை இத் தைத்திருநாள் நிச்சயம் உருவாக்கித்தரும் என்ற நம்பிக்கையுடன் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார். (ந)

# கரையோரப் பாதுகாப்பை பலப்படுத்துகிறது இந்தியா

இந்தியாவின் தென் கிழக்குக் கரையோரத்தில் பாதுகாப்பை பலப்படுத்தவுள்ளதாக இந்தியக் கடற்படை தெரிவித்துள்ளது. இந்திய மீனவர்கள் மீதான தாக்குதலின் பின்னணியில் இவ் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்திய கடற்படையின் கிழக்குப் பிராந்தியப் பிரிவின் பிரதம படை அதிகாரி எஸ்.பி.தாக்கரே செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் இந்திய மீனவர்கள் மீதான தாக்குதல் தொடர்பாக இலங்கை அரசாங்கத்திடம் இந்தியா கடும் ஆட்சேபத்தை தெரிவித்து ஒரு நாளின் பின்னர் இந்திய கடற்படை அதிகாரிகள் இத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இந்திய மீனவர் ஒருவர் பலியானார். இலங்கைக் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் இத் தாக்குதல் தொடர்பாக மத்திய அரசாங்கத்திற்கு அறிவித்திருப்பதாக தாக்கரே கூறியுள்ளார். (ந-5)

# மழை இன்னும் பெய்யும்...

27 பேர் பலியாகியும் 12 பேர் காணாமல் போயும் உள்ளனர். அதேநேரம் 14 மாவட்டங்களைச் சேர்ந்த 10 இலட்சத்து 81 ஆயிரத்து 819 பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இது வரையில் 591 முகாம்களில் 3 இலட்சத்து 25 ஆயிரத்து 348 பேர் உள்ளதுடன் இவர்களுக் காக கடந்த 13 நாட்களில் 138 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மேலும் 75 மில்லியன் ரூபாய் வழங்கப்படவுள்ளது.

கடந்த சில நாட்காளாக நாட்டில் காணப் படும் சீரற்ற காலநிலையினால் பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக மட்டக்களப்பிலேயே கூடுதலான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

கிழக்கில் 7 வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன. புதிய நெடுஞ்சாலைகள் அழிந்து போயுள்ளன. இவற்றை சீர்செய்து மக்கள் வாழ்வை கட்டியெழுப்பும் சவாலும் அரசாங்கத்துக்கே உள்ளது.

எமது இடர் முகாமைத்துவ நடவடிக்கை களினாலேயே உயிர் சேதங்களை குறைக்க முடிந்தது. யாரையும் பட்டினி போடவோ சொகுசு ஹோட்டல்களை தேடி நாம் செல்லவோ இல்லை.

கொழும்பிலிருந்து ஊடகங்களுக்கு அறிக்கை விடாது நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டும். குளங்கள் உடைந்து மக்கள் குடியிருப்புக்குள் நீர்வரும் போது பொது மக்களைப் பாதுகாக்க அதிகாரிகள் இரவு பகல் பாராது பாடுபட்டனர். இதுவரை 400 குளங்கள் உடைப்பெடுத்துள்ளன.

தற்போதைய வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட சேதங்களின் பெறுமதி 500 மில்லியன் அமெரிக்க டொலர்களாக (சுமார் 5 ஆயிரம் கோடி ரூபாய்) இருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமிய மாநாட்டு அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் தூதுவர்களுக்கும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸுக்கும் இடையிலான சந்திப்பின் போது இத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பில் கடந்த வியாழக் கிழமை தணிந்திருந்த மழை நேற்று மீண்டும் ஆரம்பித்துள்ளது. இதனால் பொங்கல் பண்டிகைக்கு களைகட்டும் மட்டக்களப்பு நகரம் சோபை இழந்து காணப்பட்டது.

இதனிடையே கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தன்னார்வ தொண்டர் அமைப்புகளிடமிருந்து போதியளவு உதவிகள் கிடைக்கவில்லை என பாதிப்புக்குள்ளான பலரும் கூறுகின்றனர்.

சுனாமியின் போதும் யுத்த அனர்த்தத்தின் போதும் இம் மாகாணத்தில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட சர்வதேச தன்னார்வ தொண்டர் அமைப்புகள் பல அதன் பின்னர் நாட்டை விட்டு வெளி யேறியமையே இதற்கு காரணம் என கூறப்படுகின்றது. (நு-5)

# ஜனாதிபதி...

கலந்து கொண்டு பாடசாலை மண்டபத்தை திறந்து வைப்பார். அத்துடன் பிற்பகல் 3 மணிக்கு சங்குப்பிட்டி–கேரதீவு பாலத்தின் ஊடான போக்குவரத்தை ஜனாதிபதி ஆரம்பித்து வைக்கிறார்.

இரண்டாம் நாளான நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். துரைப்பா விளையாட்டரங்கில் இடம்பெறும் பொங்கல் விழாவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பிக்கின்றார்.

இந்நிகழ்வின் போது வடக்கு மாகாணத்தில் 2010ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று கலை, மருத்துவம், முகாமைத்துவம் மற்றும் பொறியியல் துறைகளுக்கு பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற 100 மாணவர்களுக்கு மடிக்கணனியை வழங்கி வைப்பார். (நு-5,2,6)

# தமிழ்த் தேசியக் கூட்டமை...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் இடம்பெற்றுள்ள சில அரசியல் கட்சிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் கருத்து தெரிவிக்கையில், எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் இடம் பெற்றுள்ள வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, த.சித்தார்த்தன் தலைமையிலான புளொட், எமது தலைமையிலான தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு, ஈ.பி.ஆர்.எல்.எப். (பத்மநாபா அணி) ஆகிய கட்சிகள் போட்டியிடவுள்ளதாக தெரிவித்தார்.

இது தொடர்பான பேச்சுக்கள் கடந்த 10 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற நான்காம் கட்டப் பேச்சுவார்த்தையின் போது தமிழ்த் தேசியக் கூட் டமைப்புடன் மேற்கூறப்பட்ட நான்கு கட்சிகளும் இணைந்து உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவது என கொள்கையளவில் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் இறுதித் தீர்மானம் இன்று காலை 10.00 மணிக்கு இடம்பெறும் முக்கிய சந்திப்பில் எடுக்கப்பட்டு கூட்டாக அறிக்கை வெளியிடப்படும் என சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை இது தொடர்பில் கருத்து தெரிவித்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, பிறக்கும் தைப்பொங்கல் அனைவருக்கும் இனிப்பான செய்தியுடன் மலரட்டும் என தெரிவித்துள்ளார். (நு-5)

# இந்திய மீனவர் சுட்டுக்...

விருந்துபசாரத்தின் போது ஜனாதிபதி கருத்துத் தெரிவிக்கையில், இலங்கைக் கடற்படையினர் இச்சம்பவத்தில் சம்பந்தப்படவில்லை எனக் கூறியுள்ளார்.

இச் சம்பவம் குறித்து பிரதமர் மன்மோகன் சிங் உரையாடினாரா என கேட்டபோது இல்லை என ஜனாதிபதி பதிலளித்தார்.

இலங்கைப் படைகள் சம்பந்தப்பட்டிருந்தால் இலங்கை அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா எனக் கேட்டபோது, இலங்கைக் கடற்படையினர் சம்பந்தப்படவில்லை என ஆரம்ப விசாரணைகள் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் ஆனால் முழுமையான விசாரணை நடத்துமாறு கடற்படைத் தளபதிக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி கூறினார். இலங்கை கடற்படையின் நடவடிக்கைப் பிரிவு த[illegible]லமை அதிகாரி இது தொடர்பாக கூறுகை[illegible]ல்,

இச்சம்பவம் இந்திய கடற்பரப்பில் இடம் பெற்றுள்ளதாக தெரிவித்தார். அக்கடல் பகுதி ஆழமில்லாதது. எமது அனைத்து கப்பல் களின் நிலைகளும் தரையிலுள்ள கருவிகள் மூலம் கண்காணிக்கப்படுகின்றன. இதை யாரும் சோதனையிடலாம் எனத் தெரிவித்தார். (நு-5)


பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பாதுகாப்புச் சேவை நிறுவனத்துக்கு பாதுகாப்பு சேவை பணியில் ஈடுபடக்கூடியவர்கள் தேவை. தகுதியானவர்கள் சுய விபரம் மற்றும் முன் அனுபவம் என்பவற்றை உள்ளடக்கிய விண்ணப் பத்தை,

விளம்பர இல.3388,
இல. 03, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (3388)

விற்பனைக்கு

HSDPA Dongle Rs. 4750/=
Webcam Rs. 1450/= -2200/=
பாவித்த நல்ல நிலையில் உள்ள LCD Monitorகள் விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 6600/=
தொடர்பு: 0771350476

யாழ் மக்களுக்கு இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்
Galaxy Cabs
Call us 021 – 3201201
யாழ் நகரில் முதல் முதலில் அறிமுகமாக்குகின்றோம். Call Cabs சேவையை. 35/= Per Km.

STR TRAVELS
45A, Adiyapatham Road, Thirunelvely.
Araly East, Vaddukoddai. 0779257488
அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளப் பெருமக்கள் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்.
யாழ்–கொழும்பு சேவை
021-4921921
011-4341415


சுற்றுலா மற்றும் திருமண விஷேட சேவைகளுக்கு வான், பஸ், கன்ரர் போன்ற வாகனங்களைப் பெற்றுக் கொள்ளலாம். Mob: 0777570150

பொங்கலோ பொங்கல் ! புதுப்பானையில் பொங்கலோ பொங்கல்!
அழகுக்கு அழகு செய்யும் நவீன அழகிய டிசைன்களில் தங்க, வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்

தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்
இல:10, பஸ் நிலையம், சங்கானை

அன்பர்கள், நண்பர்கள் , வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

புதிய வினோ நகைமாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
பிரதான வீதி (செலான் வங்கிக்கு அருகாமை)
சங்கானை T.P.: 0776002588

Mobile Plaza
Phone Shop
மொபைல் ப்ளாசா போன் சொப்
Main Street, Chankanai
T.P.:0779352902 பிரதான வீதி, சங்கானை.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தைப்பொங்கல் சிறப்பு மலர்-15.01.2011


இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்

அசோகா நகை அகம்

இல:111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 6290

நம்பிக்கை நாணயம்-உத்தரவாதம்

22 கரட் தங்க நகைகளுக்கு

ASOKA JEWELERS





அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

கிருஷ்ணா நகை மாளிகை

குறித்த நேரத்தில் குறித்த தவணையில் தரம் குன்றாத 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

கிளை : கிருஷ்ணா அடகுக்கடை

இல- 370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

இல- 09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 5046



பொங்கலோ பொங்கல் ! புதுப்பானையில் பொங்கலோ பொங்கல்!

சுகாதார முறையில் உணவிற்கும் வைத்தியத்திற்கும் விஷேடமாக தயாரிக்கப்பட்டது.

VSP 1969

V.S.P லக் ஒயில்

தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும்

பரிமளா ஸ்ரோர்ஸ்

இல:26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 0212224135, 0212229165

அனைவருக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்கள்

HOLCIM CEMENT

Jaffna District Batas

யாழ். ஏக விநியோகஸ்தர்கள்

SRI RANGAN ENTERPRISES

370, Hospital Road, Jaffna.

ஸ்ரீ ரங்கன் என்ரப்பிறைஸ்

370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

T.P - 021 222 2027

Selva Hardware

120, Stanley Road, Jaffna.

செல்வா காட்வெயர்

120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

T.P - 021 222 2873




DELMEGE- மில்க்குறோ, பேக்கிங்பவுடர், ஜாம், ஐசிங்சுகர், ரின் மீன், TVP சோயாமீற், ஜலற்றீன், புடிங், நூடில்ஸ், கஸ்ரட் பவுடர், கரமல், வட்டிலப்பம், கொக்கோப்பவுடர் அனைத்தையும் சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்.

Lanka milk Food

Dairy farm

My juice

Farleys Rusk 150g

Casilian 250g

Corn Flaskes


Farleys Rusk 60g

Casilian 120g

Happy Cow Cheese

# தைப்பொங்கல் சிறப்பு மலர்-15.01.2011

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



இன்று தமிழர் திருநாளான தைப்பொங்கல் நன்னாள். இந்தத் தைப்பொங்கல் பெருநாள் மிகச் சிறந்த தெய்வீகமான ஒரு தமிழ்ப் பண்டிகை நாளாகுமம்.

வயலில் நெல்விளைச்சலுக்கு துணையாயிருந்து கதிர் வீசிக் கதிர் விளையச் செய்த சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் முகமாக இப்பெருவிழா கொண்டாடப் பெறுகின்றது.

இந்த இனிய நன்னாளிலே இலங்கை வாழ் மக்கள் எல்லோரும் சர்வ அமைதியும் சமாதானமும் சுபீட்சமும் கிடைக்கப்பெற்று நல்வாழ்க்கை வாழவேண்டுமென்றும் மங்கலம் நிறைந்த மகிழ்ச்சியோடிணைந்த இல் வாழ்க்கை சிறக்க வேண்டுமென்றும் நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து எல்லாம் வல்ல முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கின்ற கலியுகவரதனாம் நல்லைக் கந்தப் பெருமானையும் வாழ்த்தி வணங்கி உளமாரப் பிரார்த்தித்து அருளாசிகள் நல்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இற்றைநாள் வரை பட்ட துன்பங்கள், துயரங்கள், இன்னல்கள், இடுக்கண்கள் நீங்கப் பெற்று இனியாவது சந்தோஷமான, சமத்துவமான நல்வாழ்வு கிடைக்க வேண்டுமென்று சிந்தித்து, வந்தித்து, சேவித்து வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"
ஆதீன குருமுதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.

## சிவாச்சார்ய பீடாதிபதியின் அருளாசிச் செய்தி



பொங்கல் பண்டிகையை ஒவ்வொரு ஆண்டும் மூன்று நாட்கள் மக்கள் சிறப்பாக கொண்டாடுகிறார்கள். இது சங்க காலம் முதல் நடைபெற்று வருகின்ற பண்டிகை. பண்டைய நூல்களில் இந்த பண்டிகையை "இந்திரவிழா" என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

பொங்கல் பண்டிகையின் முதல்நாள் விவசாயிகள் தங்கள் வாழ்நாள் முழுவதும் உழைத்து, அதனால் கிடைத்த அரிசியை கொண்டு சர்க்கரைப் பொங்கல் செய்து, பயிர்களை விளைவித்த சூரிய நாராயணனுக்கு படைத்து வழிபடுகிறார்கள்.

இரண்டாம் நாள், வாழ்நாள் முழுவதும் உழைத்த பசுக்கள், காளைகளுக்காக பொங்கலாக்கி மாடுகளுக்கு கொடுத்து வழிபடுவர்.

மூன்றாம் நாள், அதிகாலையில் சிற்றுயிர்களுக்கு எல்லாம் கூட உணவளித்து, பொங்கல் பண்டிகையை கொண்டாடும் உயர்ந்த வழக்கம் நம்மிடையே தொன்று தொட்டு இருந்து வருகிறது. இப்படிப்பட்ட உயர்வான தைப்பொங்கலை அனைவரும் ஒன்றாக கொண்டாடி, இறைவன் அருள் பெற ஆசீர்வதிக்கிறோம்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"
**பிரதிஸ்டா சிரோமணி**
**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர், J.P,**
**சிவாச்சார்ய பீடாதிபதி,**
**அகில உலக சைவக்குருமார் சம்மேளனம்,**
**பிரதம குரு, வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.**

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்கள்!



ஆர். வி.ஜி மருந்தகம்
504, ஆஸ்பத்திரி வீதி, (O.P.D முன்பாக) யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 222 2129

ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள் மற்றும் பால்மா வகைகள் அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

R.V.G ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ. பே. இல : 021 222 6806

எல்லோருக்கும் எமது இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

J.T ரான்ஸ்போட்

யாழ் ➤ கொழும்பு
கொழும்பு ➤ யாழ்

சகல விதமான பொருட்களும் நியாயமான கட்டணத்தில் கொண்டு வந்து தரப்படும்




41 வருடகால மதிப்போடு விளங்கும்
யாழ். வணிக நிலையம்
Jaffna Traders
இல.336, 338, (மேல்மாடி) ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
குழந்தைகளின் பால்மா, பிஸ்கற் வகைகள், பெண்களுக்கான கிறீம் வகைகள், குளிரூட்டப்பட்ட அங்கர்பட்டர், மாஜரின் வகைகள், குரக்கன், எள்ளு, தேயிலை மற்றும் சகல வகைப் பொருட்களையும் ஒரே இடத்தில் நியாய விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

J.T ரான்ஸ்போட்
இல.302.ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# தைப்பொங்கல் சிறப்பு மலர்-15.01.2011

## செஞ்சொற் செல்வரின் வாழ்த்துரை



தைத்திருநாள் தமிழர்தம் வாழ்வின் பெருநாள். உழுதுண்டு வாழும் உழவர் பெருமக்களின் நன்றித் திரு நாள். இயற்கை வடிவமாக விளங்கும் சூரியக்கடவுளை மதித்துப் போற்றும் தெய்வீகத்திருநாள். இத்திருநாளை பொங்கிப்படைத்து விருந்தோம்பல் செய்து உறவை வளர்க் கும் உன்னத நாளாக முன்னோர் பேணிக்காத்தனர்.

நற்காரியங்களை தொடங்குவது முதல் நன்றிக்குரிய பணிகளைச் செய்யும் நாளாக பயன்படுத்தினர். தமக்குக் கிடைத்த செல்வங்களை ஏழைகளுக்கும் இந்நாளில் பகிர்ந்து வழங்கி திருப்தி கொள்வர். பாடுபட்டுழைக்கும் உழைப்பாளிகளின் உன்னத பணியை இந்நாளில் வாழ்த்துவர்.

ஆடல் பாடல்களால் தம்பண்பாட்டுக் கலைவடிவங்களை அரங்கேற்றி மகிழ்ந்தனர். உடல் உள ஆளுமையை நிரூபிக்கும் விளையாட்டுக்களை கிராமங்கள் தோறும் நடத்தினர். இத்திருநாளை வரவேற்றுக் காத்திருக்கும் பண்பாடு இன்றும் எம்மிடையே நிலவுகின்றது.

தைபிறந்தால் வழிபிறக்கும் என்பார்கள். மனவேதனைகளைக் கைவிட்டு தைத்திருநாளை அனைவரும் வரவேற்போம். குறிப்பாக எம் மண்ணில் அச்சம் விலகி மக்கள் ஆறுதலாக வாழ ஆதவனை மன்றாடுவோம். கண்கண்ட கதிரவன் நீதியை நிலைநாட்ட வேண்டுவோம். தமிழ்மக்கள் ஒன்றுபட்ட உணர்வோடு தமக்குள் பகைமைகளை வளர்க்காது அன்பால் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கப் பிரார்த்திப்போம். அறவழியை நிலை நாட்டுவோம். அறம் தோற்பதில்லை என்ற உண்மையை உணர்வோம். தைத்திருநாள் அனைவருக்கும் நன்நாளாக அமைய வாழ்த்தி அமைகின்றேன்.

**ஆறு. திருமுருகன், தலைவர்,**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை.**

## பொங்கலோ பொங்கல்

நாடு நலம்பெற காடு விளைந்திட
மூடுபனி மூட்டத்திலும் துன்பத்தைத் தாங்கி
கேடுதரும் வெய்யிலிலும் தாக்கமே இன்றி
பருவ உழவு தொழில் தனைப் புரிவோர்
ஏருவியக்கும் எழின் மனை தோவம்
ஏரெடுத்தார் பயன் எல்லோரும் காண
ஈடில்லா பொங்கலிட்டு இறைவனுக்குப் படைத்து
இன்பங் காணும் இனிதான பொங்கல்...

**கலாபூசணம் மு.தணிகாசலம்**
**(கற்கோவளம்)**

## பொன்னை அணிவது தவறெனப் பிறப்பது தை

தன்னை உணர்ந்திடத் தவமாய்ப் பிறப்பது- தை,
தவறினை எண்ணித் திருந்திடப் பிறப்பது- தை,
பொன்னை அணிவது தவறெனப் பிறப்பது- தை,
போதும் என்றமனம் பொலியப் பிறப்பது- தை,
அன்னை ஓர் ஆலயம் என்று பிறப்பது- தை,
அவனிக்கு 'நீதான் துணை' என்று பிறப்பது- தை,
என்னை எனக்கு அறியப் பிறப்பதும்- தை,
இன்று போல் நீ வாழ எளிமையாய் பிறப்பதும்- தை!

**கே.எஸ்.சிவஞானராஜா,**
**கொக்குவில்.**

## புது வரலாறு படைக்க தைத்திருநாளே வருக!

உலைபொங்கும் தைத்திருநாளில்
எம் மனங்கள் உவகை பொங்க
கதிரவனைப் போற்றிடுவோம்
கைவீசி நெல் விதைத்து
களிப்புடனே கதிரறுத்து
பொங்கி வரும் புன்னகையோடு
நாமனைவரும் ஒன்று சேர்ந்து
பொங்கலிட்டு மகிழ்ந்திடுவோம்
பட்டாடை தானுடுத்தி;
பட்டாசு வெடி கொளுத்தி;
பரிதியை நன்றியுணர்வோடு
நாமனைவரும் நயமோடு
கோலமிட்டு வரவேற்போம்
உரிமைகள் கிடைக்க-தமிழ்
உள்ளங்கள் யாவும் செழிக்க
வருகின்ற தைத்திருநாள்
எம் வாழ்வில்
புது வரலாறொன்று படைக்கட்டும்

**குறிஞ்சிக்கவி செ.ரவிசாந்,**
**வீரமனை, குப்பிளான்.**


பிறக்கட்டும் தைத்திருநாள்! மலரட்டும் புதுவாழ்வு!!

லாவண்யா பல் மூக்கு கண்ணாடி அகம்

வடமராட்சி வாடிக்கையாளர்களின் நலன் கருதி எமது நெல்லியடிக் கிளை தினமும் திறந்திருக்கும். மேலும் மூக்குக் கண்ணாடிகள்,செயற்கைப்பற்கள், மிதப்புப்பற்களுக்கான நிரந்தர கிளிப் என்பவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

552, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (போதனா வைத்தியசாலை முன்பாக)
தொ. பே. இல :021 222 9053

கிளை- பருத்தித்துறை வீதி, நெல்லியடி. (பொலிஸ் நிலையம் முன்பாக)




எம் இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்!

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

ராம்கோ சீமெந்து

RAMCO CEMENT



ராம்கோ சீமெந்தை பயன்படுத்துங்கள்!
உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்!

ஆசியாவின் முதலாம் தர(நம்பர்-1) தொழிற்சாலையாக தெரிவு செய்யப்பட்ட RAMCO சீமெந்து (கோபுரமார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- இலங்கையின் SLS 107 தரச்சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து
- 50 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் சீமெந்து
- மிகமிக உயர்தரம் கொண்ட சீமெந்து
- ISO 9001 உலகத்தர சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து

ராம்கோ சீமெந்தின் ஏக இறக்குமதியாளர்கள்

ஏஸ்வர பகவான் அன் கம்பனி

தொ. பே: 021 222 2122,
021 222 2350

91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

மலரும் தைத்திருநாள் மகிழ்ச்சியாக அமைய வாழ்த்துக்கள்

உடல் வளர்ச்சிக்கு

ஜீவாகாரம்

உள்ளூர் உற்பத்தியான ஜீவாகாரம் சிறியோர் முதல் பெரியோர் வரை பாவிக்க உகந்தசத்துணவு. இரசாயனக் கலவை அற்றது




உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு வழங்குவோம் என்றும் மக்கள் விரும்பிப் பாவிப்பது

அண்ணா தயாரிப்புக்களே!

| | |
|---|---|
| அண்ணா கோப்பி | அண்ணா மிளகாய்த் தூள் வகைகள் |
| அண்ணா அரிசி மா | அண்ணா பத்தி வகைகள் |
| குரக்கன் மா | அண்ணா பற்பொடி |
| ஆட்டா மா | அண்ணா இனிப்பு வகைகள் |

அண்ணா தொழிலகம்
இணுவில்

தொலைபேசி இல: 021 222 3565

# தைப்பொங்கல் சிறப்பு மலர்-15.01.2011


மலரும் தைத்திருநாள் மகிழ்ச்சி நிறைந்ததாய் அமைய வாழ்த்துகின்றோம்!

L

## நியூ நெல்சன் லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற முதன்மைச் சாரதிப் பயிற்சிப் பாடசாலை

பதிவு இல. D.S.590



- சகல வாகனங்களுக்கும் சிறந்த முறையில் பயிற்றுவித்து விரைவாகச் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புக்கள்.
- அதி கூடிய பயிற்சி நேரங்கள்.
- அதி கூடிய பயிற்சிக் காலங்கள்.
- சாரதிப் பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
- தவணை முறைக் கட்டணங்கள்.
- வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.

இல.89, கண்டி வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 4527 , 0773581916

கிளை: இல். 12/1, செங்குந்தா கட்டடம்,
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.
தொ.பே :- 0777942312

உரிமையாளர்:-
T.டயஸ்



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்கள்!

## ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

மீண்டும் பாதுகாப்பான பயணத்துக்கு
யாழ்–கொழும்பு–யாழ், யாழ்–வவுனியா–யாழ்.

சொகுசு வான்

யோகாஸ் கொமினிக்கேசன்
பிரதான வீதி, வட்டுக்கோட்டை.
தொ.பே: 021 321 5270



திருமணப் பட்டுப்
புடைவைகளுக்கும்
நவீன ரக ஆடைத்
தெரிவுகளுக்கும் சிறுவர்,
சிறுமியர்களுக்கான சிறந்த
றெடிமேற் ஆடைகளுக்கும்

ஞானம்ஸ் றெக்ஸ்ரைல்ஸ்

18A, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5679





அனைவருக்கும் தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்

பார்வையில் பழுதுண்டா? பயம் எதற்கு? நீங்கள் பொங்கிடும் பார்வையைப் பெற்றிட, பற்களில் பழுதுண்டா? விழுந்துவிட்டனவா? முன்னரைவிட உறுதியான, அழகான வெண்சங்குப் பற்களைக் கட்டிட– இளைய தலைமுறைகளே! மிதப்புப் பற்களா? அழகிய அமைப்பைப் பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புகளைப் பொருத்திட

யாழ்ப்பாணத்தில் கை தேர்ந்த ஒரே ஸ்தாபனம்

கட்டுப்பற்களைச் சுத்தம் செய்வதற்கான மாத்திரை விற்பனையில் உண்டு.

## எரிக்கணேஷ்

முக்குக் கண்ணாடியகமும்
பல் கட்டுமிடமும்




இல 564,566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:021 222 2486

கிளைகள்:
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, இல 80, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
இல.91, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.



ஓம் லட்சுமி நாராயணன் துணை



மனை சிறக்க மங்களம் பிறக்க எங்கும் பொங்குக பொங்கல்!

இல 71, நவீன சந்தை, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் இயங்கி வந்த எமது K.K. றேடர்ஸ் ஸ்தாபனம்
ஸ்ரீ வெங்கடேஸ்வரா றேடர்ஸ்
என்ற பெயரில் இயங்கி வருகின்றது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

## ஸ்ரீ வெங்கடேஸ்வரா றேடர்ஸ்

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உருளைக்கிழங்குகளின் மொத்த விற்பனையாளர்

தரமான உருளைக்கிழங்குகளைப் பெற்று தரமாக விற்பனை செய்யுங்கள்

மளிகைப் பொருட்களையும் எம்மிடம்
மொத்தமாகப் பெற்றுக் கொள்ள முடியும்

சில்லறை, மொத்த வியாபாரிகளுக்கு
விசேட தள்ளுபடி வழங்கப்படும்.

இலக்கம். 589, 591, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு: 021 222 4579

உங்களின் உயர்ச்சியே,
எங்களின் மகிழ்ச்சி!